# விடுதலைப்புலிகள்

குரல் : 106 | கார்த்திகை, 2002 | அன்பளிப்பு : 10/=



வேகமான பேச்சுக்களும் மந்தமான செயற்பாடுகளும்

வாழ்வினைக் கரைத்து வீரம் விதைத்தவன்

சமாதானமும் தீர்வும்

இதயம் கரைக்கும் இரங்கல் மொழிகள்...




மாவீரர் நாளன்று தமிழீழத் தேசியத் தலைவர் உரையாற்றிய போது...

# பரஸ்பர நம்பிக்கையை வளர்த்தபடி பேச்சுக்கள் முன்நகர வேண்டும்.

## - மாவீரர் நாள் உரையில் தமிழீழத் தேசியத் தலைவர் தெரிவிப்பு -

விடுதலைப் போராட்டத்தின் முக்கிய திருப்புமுனையாகக் கருதப்படும் இச்சமாதானச் சூழலில் அனைத்துத் தரப்பினதும் அதிக கவனத்தை ஈர்த்த தமிழீழ மாவீரர் நாளன்று தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் உரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் ஒரு வலுவான சமாதான அடித்தளத்தில் நிலையூன்றி நின்றவாறு, படிப்படியாக, கட்டம் கட்டமாக, பரஸ்பர நம்பிக்கையை வளர்த்தபடி பேச்சுக்களை முன்நகர்த்திச் செல்வதே சாலச் சிறந்தது.

தமிழர் தாயகத்தில் அமைதிநிலை தோன்றியபோதும் இயல்புநிலை தோன்றவில்லை. 'உயர் பாதுகாப்பு வலயங்கள்' என்ற போர்வையில் எமது மக்களின் வாழ்விடங்களை, சமூக, பொருளாதார, பண்பாட்டு மையங்களை சிங்கள ஆயுதப்படைகள் ஆக்கிரமித்து நிற்கின்றன. மக்கள் தமது இயல்பு வாழ்வை நடத்த முடியாதவாறு மூச்சுத் திணறும் ஆக்கிரமிப்பும், பதற்ற நிலையும் இருக்கின்றது.

மக்களின் அவசர, அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளை பேச்சுக்களின் ஆரம்பகட்டத்தில் தீர்த்து வைக்கவேண்டும் என்பதே அன்றும் சரி இன்றும் சரி எமது நிலைப்பாடாக இருந்து வருகின்றது.

இன்றைய பேச்சுக்கள் முன்னேறிச் செல்வதற்கு நேர்வே அரசு கடைப்பிடிக்கும் சாதுரியமானதும் சாணக்கியமானதுமான அனுசரணை முறை பெருதவியாக இருந்து வருகிறது.

சர்வதேச அரசுகள் இச்சமாதான முயற்சியில் காட்டிவரும் ஆர்வமும், அக்கறையும், ஊக்குவிப்பும் இரு தரப்பினருக்கும் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் கொடுத்து வருகின்றது என்றும் தெரிவித்தார்.

தேசியத் தலைவர் ஆற்றிய முழுமையான உரை:

எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே,

இன்றைய நாள் ஒரு புனித நாள்.

எமது மாவீரர்களின் நினைவு நாள்.

எமது இனத்தின் இருப்பிற்காக, தமது இன்னுயிரை ஈகம் செய்த உன்னதமானவர்களை, எமது நெஞ்சத்தின் நினைவாலயத்தில் நாம் நினைவு கூரும் நன்நாள்.

விடுதலை என்பது வாழ்வின் அதியுயர்ந்த விழுமியம். அந்த விழுமியத்தை இலட்சியமாக வரித்து, அதற்காக வாழ்ந்து, அதற்காகப் போராடி, அதற்காக மடிந்த எமது மாவீரர்கள் மகத்தான மனிதப் பிறவிகள். அவர்களது வாழ்வும் வரலாறும் எமது வீர விடுதலைக் காவியத்தின் உயிர் வரிகள்.

மாவீரர்களே, தமிழர் தேசம் உங்களுக்குத் தலைவணங்குகிறது. உங்களது தற்கொடையால் தமிழீழ மக்கள் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றார்கள். உங்களது இரத்தத்தாலும், வியர்வையாலும், உங்களது இலட்சிய உறுதியாலும் கட்டியெழுப்பப்பட்ட எமது விடுதலை இயக்கம், இன்று யாராலும் வெற்றி கொள்ள முடியாத மாபெரும் போராட்ட சக்தியாக உலகப் புகழீட்டி நிற்கிறது. போர் அரங்கில் நீங்கள் படைத்துச் சென்ற மகத்தான சாதனைகளையே இன்று உலகரங்கில், நாம் அரசியல் வெற்றிகளாக அறுவடை செய்து வருகின்றோம்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# தலைவரின் மாவீரர்நாள் உரை எடுத்துரைக்கும் அரசியல் விடயங்கள்

புலிகளின் குரல்

ஈழத்தமிழரின் சுதந்திரத்திற்கான ஆயுதப் போராட்டத்தில் முதற் களப்பலியை எமது விடுதலை இயக்கம் சந்தித்து இருபது வருடங்கள் நிறைவு கண்டுள்ளது. இந்த நீண்ட காலப்பகுதியில் காவியமான பல்லாயிரம் மாவீரர்களது தியாகத்தாலும், வீர சாதனைகளாலும் எமது விடுதலை அமைப்பு உலகப் புகழ் வாய்ந்த ஒரு இராணுவ – அரசியல் சக்தியாகத் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

இந்த இராணுவ பலவளர்ச்சியை அடித்தளமாகக் கொண்டு சிங்கள அரசுடன் ஒரு சமாதானப் பேச்சுவார்த்தையில் புலிகள் இயக்கம் இப்போது ஈடுபட்டுள்ளது.

இத்தகைய அரசியல் பின்புலத்தில் தமிழீழத் தேசியத்தலைவரின் இவ்வருட மாவீரர்நாள் உரை அரசியல் முக்கியத்துவம் பெறுகின்றது.

எமது மக்களும் – உலக அரசியல் அவதானிகளும் – சிங்கள தேசமும் தலைவரின் மாவீரர்நாள் உரையை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

இந்த எதிர்பார்ப்புக்களை நிறைவுடன் பூர்த்தி செய்யும் வகையில் அவரது உரை பல்வேறு அரசியல் விடயங்களைச் சுமந்து நிற்கின்றது.

சமாதான முயற்சிகளில் புலிகள் இயக்கம் காட்டிவரும் ஆர்வத்தையும் – நேர்மையையும் – உறுதிப்பாட்டையும் தலைவர் அவர்கள் தனது உரையில் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்தச் சமாதான முயற்சிகளுக்கு உலக சமூகம் காட்டிவரும் ஆதரவையும் – உதவிகளையும் தலைவர் அவர்கள் பாராட்டியுள்ளார்.

அதேவேளை, தமிழரின் அரசியல் அபிலாசைகளை ஏற்க மறுத்து – சமாதானப் பேச்சுக்களை சிங்கள அரசு குழப்புமானால், தனியரசு நிறுவுவதற்கான முயற்சிகளை, புலிகள் இயக்கம், மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்படும் என்ற தமிழர் அரசியலின் யதார்த்தத்தையும் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னெப்போதையும்விட இன்றைய உலக அரசியலின் போக்கு முற்றிலும் மாறிவிட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள தலைவர் அவர்கள், உலக சமூகத்துடன் முரண்படாது எமது அரசியல் இலட்சியத்தை அடையவேண்டிய தேவையையும் வலியுறுத்தியுள்ளார்.

புலிகள் இயக்கத்திற்கும் – எமது விடுதலைப் போராட்டத்திற்கும் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு – உலக அரங்கிலிருந்து ஒதுக்கப்பட்ட நிலையிலும் எமது சுதந்திரப்போர் வீறுடன் தொடர்ந்தது. சிங்கள அரசின் இராணுவ மமதையை உடைத்தெறியும் வகையில் எமது இயக்கம் போர்க்களத்தில் பாரிய இராணுவ சாதனைகளை நிலைநாட்டி படைபல உயர்ச்சியை நிரூபித்தது.

புலிகளை போர்மூலம் வெற்றிகொள்ள இயலாது என்ற இராணுவ யதார்த்தத்தை சிங்கள தேசமும் – உலக சமூகமும் முழுமையாக உணர்ந்துகொண்டன. இத்தகையதொரு யதார்த்த சூழலிலேயே சிங்களப் படைகளுடன் போர்நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்து – சமாதானப் பாதையை புலிகள் இயக்கம் திறந்துவிட்டது.

இப் பேருண்மைகளை தனது உரையிலேயே சுட்டிக்காட்டியுள்ள தலைவர் அவர்கள் நாம் முன்னெடுத்த சமாதான முயற்சிகளை உறுதியுடன் முன்னெடுத்து வருகின்றோம் என்றும் பிரகடனப்படுத்தியுள்ளார். இதேவேளை, சிங்கள அரசின் ஒரு பிரிவினர் சமாதான முயற்சிகளைக் குழப்ப எடுத்துவரும் அரசியல் நடவடிக்கைகளையும் அம்பலப்படுத்தியுள்ளார்.

இத்தகைய அரசியற்சதிகள் காரணமாக இந்த சமாதான காலப்பகுதியிலும் எமது மக்களில் பலர் அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளதையும் தலைவர் அவர்கள் வேதனையுடன் வெளிப்படுத்தியுள்ளார்.

சமாதான வழிமூலமான அரசியல்தீர்வு எத்தகைய அடிப்படைகளைக் கொண்டிருக்கவேண்டும் என்பதையும் தலைவர் அவர்கள் தனது உரையில் ஆணித்தரமாக எடுத்துரைத்துள்ளார்.

''எமது மக்கள் தமது தாயக மண்ணில் தம்மைத்தாமே ஆட்சிபுரியும் உரிமையுடையவர்களாக சுதந்திரத்துடன் – கௌரவமாக வாழவேண்டும் என்பதே எமது போராட்ட இலட்சியம்'' என்று விளக்கியுள்ள தலைவர் அவர்கள் தமிழர் தாயகம் – தமிழர் தேசியம் – தமிழர் தன்னாட்சி என்ற தமிழரின் அரசியல் அடிப்படைகளை வலியுறுத்தியுள்ளார்.

இந்த மூல அரசியற் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படமுடியும் என்ற அரசியல் யதார்த்தத்தையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்த அரசியல் அடிப்படைகளை ஏற்க மறுத்த சிங்கள அரசின் கடும்போக்குக் காரணமாகவே திம்புவிலிருந்து யாழ்ப்பாணப்பேச்சுக்கள்வரை அனைத்து அமைதி முயற்சிகளும் தோல்வி கண்டன என்ற உண்மையையும் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், திரு.ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தற்போதைய அரசாங்கம் '' நேர்மையுடனும் – துணிவுடனும் தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வுகாண முனைகின்றது'' என்று கருத்துத் தெரிவித்துள்ள தலைவர் அவர்கள் இச்சமாதான முயற்சிக்கு அனுசரணையாக இருக்கும் நோர்வே அரசின் அரசியல் சாணக்கியத்தையும் பாராட்டியுள்ளார்.

சமாதான முயற்சிக்கு சர்வதேச அரசுகள் வழங்கிவரும் ஆதரவையும் – ஊக்கிவிப்புக்களையும் தலைவர் அவர்கள் வரவேற்றுள்ளார். ''போரால் அழிந்துகிடக்கும் தமிழர் தேசத்தின் புனர்வாழ்விற்கும் – புனர்நிர்மாணத்திற்கும் உதவியளிக்க வெளிநாடுகள் பல முன்வந்துள்ளமை எமக்கு நிம்மதியைத் தருகின்றது'' என்று தலைவர் தனது மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை, இன்றைய அமைதிப்பேச்சுக்களில் காணப்பட்ட இணக்கப்பாடுகளை சரிவர அமுல்படுத்த சிங்கள அரசு தவறிவருவதால் எழுந்துள்ள சிக்கல்களையும் தலைவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

''தமிழர் தாயகத்தில் அமைதிநிலை தோன்றியுள்ளபோதும் இயல்புநிலை தோன்றவில்லை'' என்று கூறி தனது அதிருப்தியையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

காணப்பட்ட உடன்பாடுகளை சரிவர அமுல்படுத்தும் வரை தமிழர் தாயகத்தில் சமூக அமைதியும் – இயல்பு நிலையும் தோன்றுவது சாத்தியமில்லை என்ற யதார்த்தத்தையும் தலைவர் எடுத்துரைத்துள்ளார்.

·போருக்கு ஓய்வு கொடுத்து – அமைதிவழியில் அரசியல் தீர்வு காணும் நெஞ்சுறுதியுடனும் – நேர்மைத் திறனுடனும் புலிகள் இயக்கம் உள்ளதாக உலக சமூகத்திற்கு தலைவர் உறுதியளித்துள்ளார்.

''காலத்திற்கேற்ப – வரலாற்றுக் கட்டாயத்திற்கு அமைய எமது போராட்ட வழிமுறைகள் மாறலாம். ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை'' என்ற வரலாற்றுப் பிரகடனத்தையும் தலைவர் விடுத்துள்ளார்.

சமாதான முயற்சிகள் சரியான பாதையிற் சென்று வெற்றிபெற வேண்டுமாயின் இனவாத சக்திகளை இனங்கண்டு அவற்றை ஒதுக்க முயலவேண்டும் என்று சிங்கள மக்களுக்கும் தலைவர் ஆலோசனை கூறியுள்ளார்.

தமிழ்மக்கள் தமது அபிலாசைகளை அடைந்து கொள்வதற்குத் தடையாக சிங்களமக்கள் இருக்கக்கூடாது என்று வேண்டுகோள்விடுத்த தலைவர் அவர்கள் ''தமிழ் மக்களுடன் சமாதான சகவாழ்வை நடத்துவதா, அல்லது தமிழர்களை பிரிந்துசெல்ல நிர்ப்பந்திப்பதா, என்பது சிங்கள தேசத்தின் அரசியற் போக்கிற்தான் தங்கியுள்ளது'' என்ற உண்மையையும் சிங்கள மக்களுக்கு எடுத்துரைத்துள்ளார்.

# வேகமான பேச்சுக்களும் மந்தமான செயற்பாடுகளும்




தலைவர் பிரபாகரனுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்குமிடையே கையெழுத்தான போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பிரதான இலக்கு தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையை முழுமையாகத் திரும்பச் செய்விப்பதேயாகும்.

தமிழ் மக்களுக்கெதிரான பொருளாதாரத் தடைகளை நீக்கி - மீன்பிடித் தடைகளை அகற்றி - இராணுவ பிரசன்னங்களைக் குறைத்து தமிழ் மக்கள் தங்களது நிலத்தில் இயல்பு வாழ்க்கை வாழும் புறச்சூழலை ஏற்படுத்துவதே அந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.

பத்து மாதங்களுக்கு மேலாகியும் மீன்பிடித்தடை முற்றாக விலக்கப்படவில்லை. மக்கள் பயணிக்கும் சாலைகளைத் திறந்து அவர்களது போக்குவரத்துக்கு வழிவிட இன்றுவரை, படைத்தரப்பால் மறுப்புத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

இராணுவ பிரசன்னத்தைக் குறைப்பது என்ற தீர்மானத்தைப் பொறுத்த வகையில் அது வெறும் ஆரம்பக் கட்டத்திலேயே உள்ளது.

பாடசாலைகள் - வீடுகள் - பொதுக்கட்டடங்களில் இருந்த படையினர் விலகிச்செல்ல தொடர்ந்தும் மறுத்துவருகின்றனர். விலக்கிக்கொள்ளப்பட்ட சில கட்டடங்களுக்கு மிக அருகிலேயே புதிய இராணுவ முகாம்களை அமைத்து ஒப்பந்த விதிகளை கேலிக்கிடமாக்கி வருகின்றனர்.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவ பிரசன்னம் தொடர்ந்தும் நிலைநிறுத்தப்பட்டு வருகின்றது. குடாநாட்டின் சுமார் மூன்றில் ஒரு பகுதி நிலத்தை அதியுயர் பாதுகாப்பு வலயம் என்று கூறி படையினர் ஆக்கிரமித்து வைத்துள்ளனர். இப்பகுதியில் வதியும் மக்கள் சமாதான காலத்திலும் அகதிகளாகவே அல்லலுறுகின்றனர்.

தாய்லாந்தில் நடைபெற்ற முதற்கட்டப் பேச்சுவார்த்தையில் புலிகள் இயக்கம் கலந்துகொள்ள முன்பே போர்நிறுத்த ஒப்பந்த விதிகள் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டை சிறிலங்கா அரசாங்கம்மீது சுமத்தியிருந்தனர்.

எனினும், அரசுக்கு மேலும் ஒரு கால அவகாசத்தை வழங்கும் நல்நோக்குடனும் - சமாதானப்பேச்சை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த உதவும் வகையிலும் முதற்கட்ட அமைதிப்பேச்சில் கலந்துகொள்ள புலிகள் முடிவெடுத்திருந்தனர்.

இரண்டாங்கட்ட தாய்லாந்துப் பேச்சுவார்த்தை தொடங்கமுன்னரே மீன்பிடித்தடை நீக்கத்திற்கும் - இராணுவ பிரசன்னக் குறைப்பிற்கும் சிறிலங்கா அரசு இணங்கியிருந்தது.

எனினும், படைத்தரப்பைப் பகைக்க விரும்பாத சிறிலங்கா அரசாங்கம் புலிகளுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவருகின்றது.

இந்த நிலையிலேயே இரண்டாம் கட்ட தாய்லாந்துப் பேச்சுவார்த்தையும் நடந்து முடிந்துள்ளது.

மக்கள் மீளக் குடியமர்தலுக்கும் - இராணுவ பிரசன்னக் குறைப்பிற்கும் - அரசியல் தீர்விற்கான முயற்சிக்குமென உபகுழுக்கள் அமைக்கப்பட்டது இப்பேச்சுவார்த்தையின் சிறப்பம்சங்களாகும்.

இராணுவ பிரசன்னம் குறைக்கப்படாதவரை மக்கள் மீளக் குடியமர்தல் என்பதும், அரசியல் தீர்வுதேடும் ஆய்வு முயற்சிகள் என்பதும் நடைமுறையில் அர்த்தமற்றவையாகவே இருக்கும் என அரசதரப்பினர்க்கு புலிகளின் பிரதிநிதிகள் இடித்துரைத்துள்ளனர்.

சமாதான சூழல் உருவாவதற்கு புலிகள் இயக்கம் தன்னாலான அனைத்து முயற்சிகளையும் எடுத்து - அவற்றை நடைமுறையில் வெளிக்காட்டி வரும் இந்த நல்லெண்ண சூழலிலும் படைத்தரப்பினரின் இராணுவ நலன்களை சிங்கள அரசாங்கம் உறுதியாகப் பாதுகாக்க முயல்வது சமாதானத்தின் எதிர்காலத்திற்கு தீங்கிழைப்பதாகவே உள்ளது:

போர்நிறுத்தம் அமுலிலுள்ள இவ்வேளையிலும் - சமாதானப் பேச்சுக்கள் நடைபெறும் இச்சூழலிலும் சிறிலங்காப் படையாட்களால் தமிழ்மக்கள் கொல்லப்படுதல் என்பது முற்றாக நிறுத்தப்படவில்லை.

படையினரின் அத்துமீறல் செயல்களுக்கும் - ஒப்பந்த விதிகளை அரசாங்கம் அமுல்படுத்தப் பின்னடிக்கும் செயலையும் கண்டிக்கும் நோக்குடன், தமிழ்மக்கள் - ஜனநாயக வழியில் - ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடாத்தி தமது அதிருப்திகளை வெளிப்படுத்தும்போது அம்மக்களுக்கு எதிராக, படையினர், படுகொலை முயற்சிகளையும் அச்சுறுத்தல்களையும் பரிசாக வழங்குகின்றனர்.

> பேச்சுக்களை நடாத்துவதிலும் – உடன்பாடுகளை எட்டுவதிலும் சிங்கள அரசாங்கம் காட்டும் ஆர்வத்தை அவற்றை நடைமுறைப்படுத்துவதில் காட்டவில்லை. இவற்றை நடைமுறைப்படுத்துவது படையினரின் வேலை எனக்கூறியும் – சிறிலங்காவின் ஜனாதிபதி அதற்குத் தடையாக உள்ளார் என்று காரணம் கூறுவதும் சமாதான முயற்சிகளுக்கு நன்மையளிக்கப் போவதில்லை.

சமாதான காலத்திலும் தமிழ்மக்கள் சிங்களப் படையினரால் கொல்லப்படுவதை சிறிலங்கா அரசாங்கம் தடுக்க முனையாதது சமாதானத்திற்குக் கிடைத்த பலத்த அவமானமாகும்.

போர்நிறுத்த ஒப்பந்த விதிகளை பூரணமாக அமுல்படுத்த முன்வராத சிறிலங்கா அரசாங்கம் நியமிக்கப்பட்ட மூன்று உபகுழுக்களையும் முழுமையாக இயங்க அனுமதிக்கும் என்று தமிழ்மக்கள் சந்தேகிப்பது நியாயமானதே!

தமிழர் தரப்புடன் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக, ஒப்பந்தங்களைச் செய்வதும் - பின்னர் அதை நடைமுறைப் படுத்தாது இழுத்தடித்து - இறுதியில் அவற்றைக் கைவிடுவதும் கடந்தகாலத்தைப் பொறுத்தளவில், சிங்கள ஆட்சியாளர்களின் பொதுப்பண்பாகவே இருந்துள்ளது.

அது ஒரு தொடர்கதையாக இப்போதும் தொடரும் சூழல் உள்ளதா! என தமிழ்மக்கள் ஐயமுறுகின்றனர்.

தமிழ்மக்களின் அடிமனதில் ஆழமாகப் பதிந்துவிட்ட - சிங்கள ஆட்சியாளர்கள் தொடர்பான - இந்த வரலாற்றுச் சந்தேகத்தைத் தீர்த்துவைக்கும் தலையாய பொறுப்பு திரு.ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் கைகளிலேயே உள்ளது.

இராணுவ பிரசன்னத்தைக் குறைக்கும் நோக்குடன் - தாய்லாந்துப் பேச்சின் பிரகாரம் - புலிகளின் தளபதிகளுக்கும், சிங்களத் தளபதிகளுக்குமிடையே நடைபெற்றுவரும் பேச்சுக்களும் எதிர்பார்த்த நன்மைகளைத்தரத் தவறி வருகின்றது.

சிங்கள அரசாங்கம் பேச்சுக்களை நடாத்தி - உடன்பாடுகளை அறிவித்து வருகின்றது. ஆனால், இவற்றிற்கு நடைமுறை வடிவம் கொடுக்க அது பின்னடிக்கிறது.

பேச்சுக்களை நடாத்துவதிலும் - உடன்பாடுகளை எட்டுவதிலும் சிங்கள அரசாங்கம் காட்டும் ஆர்வத்தை அவற்றை நடைமுறைப்படுத்துவதில் காட்டவில்லை. இவற்றை நடைமுறைப்படுத்துவது படையினரின் வேலை எனக்கூறியும் - சிறிலங்காவின் ஜனாதிபதி அதற்குத் தடையாக உள்ளார் என்று காரணம் கூறுவதும் சமாதான முயற்சிகளுக்கு நன்மையளிக்கப் போவதில்லை.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வுகாண புலிகள் இயக்கம் உறுதியுடனேயே உள்ளது. அதற்காகக் கடந்த ஒருவருடகாலமாக எவ்வளவோ விட்டுக்கொடுப்புக்களையும் - நல்லெண்ணச் செயற்பாடுகளையும் புலிகள் செய்து வருவது உலகறிந்த உண்மையாகும். இது காரணமாக, சர்வதேச மட்டத்தில் புலிகள் இயக்கத்தின் பெயரும் - புகழும் வேகமாகப் பரவி வருகின்றது. அரசியல் ரீதியில், புலிகள் இயக்கம், கீர்த்தி மிக்கதொரு மக்கள் இயக்கம் என்ற உண்மையை சர்வதேச நாடுகள் படிப்படியாக ஏற்று வருகின்றன. இது புலிகள் இயக்கத்திற்குக் கிடைத்துவரும் அரசியல் - இராஜதந்திர வெற்றிகளாகும்.

இதேவேளை, எட்டப்பட்ட உடன்பாடுகளின் பிரகாரம் சிறிலங்கா அரசதரப்பினர் நடந்துகொள்ளத் தவறிவருகின்றனர் என்ற உண்மையும் சர்வதேச உலகிற்கு நன்கு தெரியும்.

நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சிற்கு உறுதியான அடித்தளம் இட வேண்டிய முக்கிய பொறுப்பு சிறிலங்கா அரசாங்கத்திடமே உள்ளது.

ஏற்கனவே அது ஏற்றுக்கொண்டு உடன்பாடு கண்டதற்கு ஒப்ப தமிழர் நிலத்தில் பூரண இயல்புநிலை தோன்ற சிங்கள அரசாங்கம் விரைவாகச் செயற்படவேண்டும்.

தமிழ்மக்களின் இயல்பு வாழ்க்கைக்குக் குறுக்கேயுள்ள மீன்பிடித் தடை, போக்குவரத்துச் சாலைத் தடைகளை அரசு நீக்க வேண்டும். அத்துடன் இராணுவ பிரசன்னத்தைக் குறைக்கும் இலக்குடன், ஏற்கனவே கண்ட உடன்பாட்டின்படி இராணுவ முகாம்களை அகற்றி மக்களின் மீள்குடியேற்றத்திற்கும் - அவர்களின் கல்வி - தொழிற்துறைக்கும் இடம் கொடுக்க வேண்டும்.

இவை, முறைப்படியும் - விரைவாகவும் செயற்படுத்தப்படும் போதுதான் மூன்றாம்கட்ட பேச்சுவார்த்தை என்பது அர்த்தமுள்ளதாகவும் - ஆக்கபூர்வமானதாகவும் அமையும்.

- எல்லாளன் -

# சிறகெடுக்க ஒரு வெளியும் நடந்துலவ ஒரு வழியும்

வியாசன்

பகலானதும் அவிச்சல்
இரவானதும் இதமான காற்று
அதிகாலையில் மிதமான பனியின் தூவல்.
போர்நிறுத்தமென்பதால்
ஊர்முற்றம் கொஞ்சம் உறங்கிக் கிடக்கிறது.
புயலடித்துச் சரிந்த மரங்களும்
நெருப்பெரிந்து கருகிய கொடிகளும்
இப்போ பூக்கத் தொடங்கியுள்ளன.
உப்பட்டி முலைகள் ஆங்காங்கே நிமிர
அறுவடை முடிந்த வயல்களும்
அம்மணமாய் கிடக்கின்றன.
வண்ண வண்ணக் குருவிகள் வந்திருந்து
பின்வளவு மரங்களில் ''கிண்ணாரம்'' வாசிக்கின்றன.
வன்னியை எட்டிப்பார்க்காத வசந்தக்காற்று
என்னமாய் வீசுகிறது இப்போது.
ஒட்டுப்போட்ட சைக்கிள்கள் உலவிய தெருவில்
பட்டுமேனிக் கார்கள் பவனி வருகின்றன.
எங்கள் பிள்ளைகளுக்கு இலவசக் கண்காட்சி
வாயைப் பிளந்தபடி வடிவு பார்க்கின்றனர்.
குண்டு விமானங்களின் இரைச்சல் தொலைந்ததால்
தொட்டில்கள் தூங்க மறுக்கின்றன.
''எங்கேயம்மா கிபிர்'' என்ற கேள்விக்கு
வருமெனும் தாயாரின் வார்த்தையிற்தான்
எத்தனை நம்பிக்கை சுடர்கிறது.
இரவெல்லாம் விழித்திருந்து இரங்கும்
சிவராத்திரியும் வந்து போனது.
இம்முறை ஒட்டுசுட்டான் சிவனாருக்கும்
சங்காபிஷேகம் நடந்தது.
தீப ஒளியில் ஜொலித்தார் ஆலகண்டர்.
வன்னிக்கு எப்படி இத்தனை வாழ்வு?
என்ன நடந்ததென இத்தனை மிதப்பு?
இன்னும் ஜோச்புஷ்சும், வாஜ்பாயும் வரவில்லை.
மற்ற எல்லோரும் வந்து போகிறார்கள்.
அடைகாக்க முடியாத அளவுக்கு
மடிநிறைய முட்டைகள்.
குஞ்சாகுமோ? கூழாகுமோ? என்பதே கேள்வி.
வலசைபோகும் சமாதானப் பறவைகள் சில
எங்கள் களங்கண்டிக் கம்புகளில் களைப்பாறுகின்றன.
இலவச இணைப்பாக ஜெகஜோதிக் கலகலப்பு.
நந்திக் கடலுக்கு மட்டும் நம்பிக்கையில்லை.
நடக்கட்டும் கூத்து என்பதாய்
சின்னச் சிரிப்புதிர்த்துக் கிடக்கிறது ஜீவமடி.
வற்றாப்பளைக் கிழவி வாசற்படியிறங்கி
சுற்றியொரு பார்வை பார்த்துவிட்டு
பொய்யமைதி என்றாளாம் நேற்று.
சிலம்பிரண்டும் கலீர், கலீரென
கண்ணாத்தாள் காவலிருக்கிறாள் நமக்கு.
உலைமுகத்தின் நெருப்பவித்து போகாமல்
ஊதிக்கொண்டிருக்கிறோம் இன்றும்.
காலமகள் வன்னியைக் காதலிக்கத் தொடங்கியதால்
ஆலவிஷமணியும் அனற்குஞ்சுகளுக்கு ஓய்வு.
உரத்த குரலெடுத்து ஒன்றுரைப்போம்.
எமக்குச் சிறகெடுத்தெழ ஒரு வெளி வேண்டும்.
கால்கள் நடந்துலவ ஒரு வழி வேண்டும்.
கைகளை விரித்தபடி காற்றிலேறிப் பறக்க
வானமொன்று வசமாக வேண்டும்.
நாமே நமது வாழ்வைத் தீர்மானித்தபடி
போவோம் வருவோம்.
நாமே எமது இயல்பை எழுதியபடி
எழுவோம் இருப்போம்.
எம் விழிகளுக்கு முன்னே சுவரிருத்தலாகாது.
பார்வைபடும் தூரம்வரை நடப்போம்.
எவரும் ஏனெனக் கேட்கக்கூடாது.
எம் கால்களில் விலங்குகள் இருக்கக்கூடாது.
எமக்குரிய திசையில் நடப்போம்
எங்கே பயணமென கேட்கலாகாது.
எமக்கான பாடலை நாமே பாடுவோம்
உரத்துப்பாடாதேயென உத்தரவு கூடாது.
தமிழர் இளிச்சவாயரெனும் தாழ்நிலையகன்று
உயர்ந்தோரெனும் நிலை வேண்டும்.
எமக்கு மேலே ஒருவரிலர்.
எமக்குக் கீழேயும் எவருமிலர்.
காலில் மிதிபடும் புழுவாய்
கையில் நசிபடும் பூச்சியாய்
இருக்க ஒப்பாது எம்மனசு.
இனியும் ''உபமனிதராய'' உயிர்வாழ முடியாது.
எம்முற்றம் வந்தமர்ந்து தீனிபொறுக்கும்
மணிப்புறா எத்தனை மகிழ்ச்சிகொண்டு உலவுகிறது.
விடிகாலை கூவும் சேவலின் குரலில்
எத்தனை கம்பீரம்.
அத்தனை ராஜகம்பீரம் யார் தருவார்?
அவர் வருக.
அவருடன் பேசுவதில் ஆட்சேபனை இல்லை.
கிட்டும்வரை சூரியனைத் தொடும் நினைவில்
உயர்ந்தெழும் எம் கரங்கள்.
விடுதலையென்பது வேலியிடும் காரியமல்ல.
வெறும் மொழிக்கான சமாச்சாரமுமில்லை.
அது உயிரிழைத்துப் பாடும் உன்னதம்.
கானடா ராகத்தின் கச்சிதம்.
குருதியிலும் சதைத் துணிக்கைகளிலும்
உயிரறுக்கும் வலிக்குரலிலும்
எமக்கு நாட்டமில்லை.
குழிதோண்டி விதைத்த கொடுப்பனவு போதும்.
கல்லறை வரிசைகள் விரவிய வயல்கள்
நெஞ்சு தீப்பிடித்தெரிய நீள்கிறது.
வேண்டாமிந்த வினை விளையாட்டு
யாரேனும் வந்து கைபிடித்து விடுங்கள்.
அருகருகாய் அமரச் செய்யுங்கள்
பேச்சிலிருந்தும் புலரலாம் புதிய வைகறை.
இத்தனை தூரம் இறங்கிவருவது கூட
இயலாமையென எவரும் எண்ணக்கூடாது.
போர்க்களப் புரவிகள் புல்மேய்கின்றனவே தவிர
பணிமுடிந்ததென வண்டியிழுக்கப் போகவில்லை.
கடிவாளத்தையும் சேணத்தையும் தளர்த்தி
கொஞ்சம் காலாற விட்டுள்ளோம்.
ராஜரதங்களின் சக்கரங்கள் துருப்பிடிக்கவில்லை
தேவகுமாரர்கள் செப்பனிடுகின்றனர்.
வாளையும் வேல்க்கம்பையும் வீசவில்லை
உலைமுகத்தில் உருக்கேற்றுகிறோம்.
போரெனில் போர்
பேச்சுவார்த்தையெனில் பேச்சுவார்த்தை
அன்று அவர்கள் கூறிய தொனியில்
இன்று எமதுகுரல் எழுகிறது.
எந்த வழியெனினும் எமக்குவேண்டும் விடுதலை.
தருவதாயின் ஏற்றுக்கொள்வோம்
வழியெதுவென அவர்கள் தீர்மானிக்கட்டும்.
கொடுத்த விலைக்கீடாகத் தட்டிலிருக்கவேண்டும்.
தராசுமுனை சரியக்கூடாது.
படலை திறந்துபோன பந்தங்களே
உடலை உங்கு வைத்திருங்கள்
உள்ளம் என்றும் எம்மோடிருக்கட்டும்.
உமக்கான வாழ்வின் பிரமாண்டம்
நிர்மாணிக்கப்படுகிறது.
உம் பிள்ளைகளுக்கான உல்லாச ஊஞ்சல்
இங்கே ஆலமரங்களில் ஆடுகிறது.
உங்கள் நாளைய வாழ்வுக்கான மையப்புள்ளி
உயரமான இடத்தில் பவுத்திரப்படுத்தப்படுகிறது.
மயக்கங்கள் ஏதுமற்ற மனவெளி மனிதராய்
இருக்கிறோம் நாம்.
இருப்பீர் நீங்களும்.
சொந்தங்கள் சந்திக்கும் திருநாளுக்காக
கோபுரமணிகள் அசைகின்றன.
கண்டங்களையும், கடல்களையும் கடந்து
காதில் விழுகிறதா காண்டாமணிச் சத்தம்.

# சமாதானத்திற்கும் பக்கவாதம்!!

எல்லா யுத்தங்களும் பேச்சு மேசையைக் கண்டிருக்கின்றன. ஆனால், எல்லாப் பேச்சு மேசையும் தீர்வைக் கண்டதில்லை. காணப்பட்ட தீர்வுகளும் கூட பிரச்சினையை தீர்த்துவிட்டதும் இல்லை.

இப்படியொரு வாக்கியம் சமாதான காலத்தில் ஏன்? இதுவொரு அபசகுனம் அல்லவா என்று யாரும் எண்ணிவிடக்கூடும். அதுவும் சர்வதேசமட்ட மாநாட்டில் புலிகளும் பங்குபற்றக்கக்கூடிய சூழ்நிலையில் இந்த வாக்கியம் பொருத்தமற்றது என யாரும் எண்ணினால் அதுவும் சரிதான். ஆனால், யதார்த்தம் அதுவாக இருப்பின் அது அதைவிடச் சரியாக எதையும் பொருத்திவிடுகிறது.

தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் சென்ற வருடம் (2001) மாவீரர் நாளன்று உரையாற்றியபோது, நடக்கவிருக்கும் சமாதானத் திற்கும் யுத்தத்திற்குமான அறைகூவலைக் கொண்ட தேர்தலில் இனவாதத்தை இனங்கண்டு ஒதுக்கிவிடுமாறு சிங்கள மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். இறுதியில் தேர்தல் முடிவும் அவ்வாறே ஆயிற்று.

இத்தகைய மாற்றம் ஒரு நல்ல சகுனம். இது ஒரு நல்ல நிலைக்கு எடுத்துச் செல்லப்படவேண்டிய பொறுப்பும் கூட. இதற்குப் புலிகள் தடையாக இருந்ததில்லை இருக்கப் போவதுமில்லை என்பதை இந்த ஒன்பது மாத சமாதான காலத்துள் அவர்கள் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

அரசு புலிகளுக்கிடையிலான இந்தப் பேச்சுவார்த்தை மூன்று கோணங்களில் முன்னேற வேண்டியிருக்கிறது. உத்தேசமும் அதுதான்.

ஒன்று சர்வதேசத்தின் நிதி உதவி தொடர்பானது. இரண்டாவது தமிழர் தாயகப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் இருப்புத் தொடர்பானது. மற்றது இனப்பிரச்சினைக்கு அடிப்படையான அரசியல் தீர்வு தொடர்பானது.

இதில் நிதி உதவியை நோக்கி அரசாங்கத்தால் அடிக்கப்படும் நீச்சலைப்போல் மற்றைய முனைகளில் அரசின் ஆர்வமான முயற்சியை, முன்னேற்றத்தை, புரிந்துணர்வைக் காணக் கிடைக்காதது ஏன்?

அடிப்படையான அரசியல் தீர்வு தொடர்பான விடயத்தில் பொறுமையும், நிதானமும், ஆய்வும், அவகாசமும் தேவைப்படுவதால்

**– பிரபுத்திரன் –**

அது தொடர்பிலான வேகமின்மையை, ஆர்வமின்மையாகச் சந்தேகிப்பது பொருத்தமற்ற ஒன்றாக இருக்கலாம்.

ஆனால் இராணுவ இருப்புத் தொடர்பான விடயத்தில்.......?

இராணுவ இருப்பென்பது இயல்பு நிலையோடு பின்னப்பட்டிருப்பது. இயல்பு நிலை என்பது சமாதானத்தின் மீதான நம்பிக்கையோடு பின்னப்பட்டிருப்பது. நம்பிக்கை என்பது சமாதானத்தின் அடுத்தகட்ட ஆர்வத்தோடு பின்னப்பட்டிருப்பது. சமாதானத்தின் ஆர்வம் என்பதோ யுத்தத்தின் தெரிவைத் தவிர்த்து நிற்பது.

யுத்தம் என்ற தெரிவைத் தவிர்ப்பதுதான் சமாதானத்தை அடைவதற்குத் தேவையான எல்லா முன்நிபந்தனைகளுக்கும் முதன்மையானது.

ஆக, இதுவே முன்கை எடுக்கப்படவேண்டிய முக்கியமான விடயம். ஆனால் யுத்தநிறுத்த உடன்பாடே இன்னும் உறுதியடையாமல் ஜீரணமாகாமல் இருக்கிறதே!

ரணில் அரசாங்கம் ஆட்சியைப் பொறுப்பேற்றபோது சந்திரிகா தனது அமைச்சர்கள் அடங்கிய இரகசியக் கூட்டமொன்றில் உரையாற்றியபோது, "ஆறு வருடமாக அரசாங்கத்தை வைத்திருந்த எமக்குத்தான் தெரியும் ரணிலால் அரசாங்கத்தைக் கொண்டு நடத்தக் கூடியவாறு பொருளாதாரம் இன்று இல்லையென்ற உண்மை". எனக் கூறியதாக செய்திகள் கசிந்தன.

நிதி எப்பொழுதும் அரசின் நிர்வாகப் பொறிகளை பலப்படுத்துகிறது. யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் நாட்டில் இராணுவப் பொறியின் பலம் பலவீனம் என்பது அதிகம் அதன் நிதி மூலத்திலேயே தங்கியிருக்கிறது.

சந்திரிகா அரசாங்கமும் சர்வதேசத்தின் நிதி உதவியைப் பெற இராணுவ முனைப்பில் விட்டுக் கொடுப்பற்ற சமாதானத்தில் இறங்கித் தோற்றுப்போனது.

ஆக, அரசாங்கத்தைத் தக்கவைக்க நிதியை நோக்கி நீச்சலடிக்க வேண்டியது ஆளும் கட்சியின் அதன் தலைவரின் முதன்மையான தேவையும் நிர்ப்பந்தமும் ஆகிறது. இந்நிலையில் ஆளும் கட்சியின் உடனடி இராஜதந்திரம் தனது அரசாங்கத்தை ஆட்சியில் தக்கவைப்பதற்காகத்தான் பிரயோகிக்கப்பட இயலும். சர்வதேசமோ இலங்கைக்கான நிதி உதவியை சமாதான தடாகத்தின் மறுமுனையில் வைத்திருக்கிறது.

எனவே எந்த அரசாங்கமும் சமாதான தடாகத்தில் இறங்கி நீச்சலடிக்க வேண்டியது தவிர்க்கவியலாதது. ஆனால், இங்கு போட்டியிடுவது நிபந்தனையல்ல. மாறாக, போட்டியற்ற பொறுமையும் புலிகளுடனான கூட்டுமே நிபந்தனையாகிறது.

எனவே சமாதானப் பேச்சில் நிதியுதவிக்கான முனை துருத்திக்கொண்டு ஒஸ்லோவில் நடக்கும் சர்வதேசமட்ட மாநாடுவரை முன்னேறிவந்திருக்கிறது. இந்த ஆரோக்கியமான வளர்ச்சியை ஏன் இந்தக் கண்ணோட்டத்தில்தான் நோக்கவேண்டுமா. என்று கேட்டால் இல்லைத்தான்!

ஆனால் சமாதானத்திற்கான முன் நிபந்தனைகளுக்கெல்லாம் முதன்மையான யுத்தம் என்ற தெரிவை மறுதரப்பு தவிர்ப்பதற்கான இயல்பு நிலையை உருவாக்குவதில் ஏன் அரசு இத்தகைய முனைப்பையும் முன்னேற்றத்தையும் காட்டவில்லை என்ற கேள்வி இருக்கும்வரை இத்தகைய கண்ணோட்டமும் இருக்கும். இருக்கவும் வேண்டும். ●



## ரணிலின் எதிர்பார்ப்பும் சந்திரிக்கா கூட்டணியின் சுயவெளிப்படுத்தல்களும்...



நவம்பர் 25ஆம் திகதி ஒஸ்லோவில் நடைபெறும் மாநாடு உலகின் கவனத்தை ஈர்க்கும் ஒன்றாக அமையப் போகிறது என்பதுடன் அது விடுதலைப் புலிகளை சர்வதேசம் ஏதோ ஒரு வகையில் அங்கீகரிப்பதாகவும் அமையப் போகின்றது என்பதுதான் இன்று சிறிலங்காவின் எதிர்க் கட்சிகளுக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி சந்திரிகாவுக்கும் ஏக்கத்தையும் சினத்தையும் ஏற்படுத்தும் விடயமாகியுள்ளது.

இந்த அங்கீகாரத்தை 'நோர்வே'தான் பெற்றுக் கொடுக்கிறது என்ற கணிப்பில் சனாதிபதியும் அவரது வெளியுறவு ஆலோசகர் கதிர்காமரும், நோர்வே மீதான தமது அதிருப்தியையும், மிகவும் வெளிப்படையாகவே தெரிவித்து வருகின்றனர்.

சமாதான நகர்வுகளின் பெறுபேறுகள் மற்றும் நிலைப்பாடுகள், அடுத்தகட்ட பேச்சுக்களில் பேசப்படப் போகும் விடயங்கள் ஆகியவை குறித்து தனக்கு அறிவிக்கப்படுவதில்லை என்றும், தான் முக்கியத்துவமிக்க தேசியப் பிரச்சினையிலிருந்து ஓரங்கட்டப் படுவதாகவும் சந்திரிகா கூறியிருப்பது அர்த்தமற்ற விடயம் என அமைச்சர் பீரிஸ் தெரிவித்திருப்பதானது அவருக்கு மேலும் சினத்தை ஏற்படுத்தியுள்ளது. எந்தப் பேச்சுவார்த்தைகளுக்கும் இறுதித் தீர்வு பாராளுமன்றங்களால் எட்டப்பட்டதில்லை என்று பீரிஸ் கூறியிருப்பதன் மூலம் பாராளுமன்ற செயல்முறைகளுக்கும், சனாதிபதியின் அதிகார வரையறைகளுக்கும்பால் ஒரு சர்வதேச அணுகுமுறைக் கோட்பாடுகளின் அடிப்படையில்தான் பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன என்பதை தெளிவாக்குவதாக உள்ளது.

வெளிநாடுகளின் தூதுவர்கள் நேரடியாகவே வன்னிக்கு வருகை தந்து விடுதலைப் புலிகளுடன் புனர்வாழ்வு புனரமைப்பு குறித்துப் பேசுவதும், இத்தகைய நடவடிக்கைகளுக்கு தாம் நேரடியாகவே உதவ விரும்பும் ஆவலை வெளிப்படுத்தி வருவதும், பிரச்சினைகள் வேறுபாதையில் - தாம் எதிர்பார்க்காத, தமது அபிலாசைகளுக்கு மாறாக செல்லத் தொடங்கியுள்ளது என்பதை எதிர்க்கட்சியினருக்கு அறிவுறுத்தியுள்ளதுடன் அவர்களை அச்சங்கொள்ளவும் வைத்துள்ளது.

சமாதானத்தை ஏற்கவும் முடியாது நிராகரிக்கவும் முடியாது. ரணிலின் ஆட்சியைக் கலைத்து தேர்தலை நடத்தவும் முடியாது. கலைக்காது ஆட்சியைத் தொடரவிடவும் முடியாது. உலக சமூகத்தின் அழுத்தத்தை ஏற்கவும் முடியாது, புறக்கணிக்கவும் முடியாது, விடுதலைப் புலிகளை அங்கீகரிக்கவும் முடியாது, நிராகரிக்கவும் முடியாது. சந்திரிகாவும் கதிர்காமரும் மாறிமாறி முன்னுக்குப்பின் முரணான அறிக்கைகளை விடுவதன் மூலம் தமது மனக்குழப்பத்தையும் சினத்தையும் வெளிப்படுத்தி - தாம் முரண்பாடுகளின் மூட்டைகள் என்பதையும் பலவீனங்களின் மொத்த உருவங்கள் என்பதையும் சிறிலங்காவின் மக்களுக்கு மட்டுமல்ல, சர்வதேச சமூகத்திற்கும் தெளிவாக்கியும் வருகின்றார்கள். ◆

# வாழ்வினைக் கரைத்து வீரம் விதைத்தவன்

**1987**ஆம் ஆண்டு, இலங்கை - இந்திய ஒப்பந்தம், இந்தியப்படை வருகை என பல வரலாற்றுச் சம்பவங்களைக் கொண்ட ஆண்டு. இருப்பைப் பாதுகாத்தல், தலைமையைப் பாதுகாத்தல், கட்டமைப்பைப் பாதுகாத்தல், வளங்களைப் பாதுகாத்தல் அதேநேரம் எதிரியுடன் சண்டையிடல். சுருங்கக் கூறின் 'கண்ணையும் பாதுகாக்கவேண்டும், இமையையும் பாதுகாக்கவேண்டும்' அதேநேரம் பார்க்கவும் வேண்டும்.

'கல்மடு', 'இராமநாதபுரம்' ; கிளிநொச்சி மாவட்டத்தின் சிறு ஊர்கள் அவை. காட்டுப்புறங்களை ஒரு பகுதியாகவும், நீர்த்தேக்கங்கள், மக்கள் குடியிருப்புக்களை மறு பகுதியாகவும் உள்ளடக்கிய புதிய விஞ்ஞான வரவு அற்ற அம்மக்களின் வாழ்க்கைக்கான 'ஆதாரம்' நிறைந்த அந்தக் கிராமங்கள். புலிகளின் வரவினால் புளங்காகிதம் அடைந்தன. புலிகளை "எங்கட பொடியள்" என ஒருபகுதி மக்களும், "பெரிசு" என இன்னொரு பகுதி மக்களும் உரிமையுடன் அழைத்தனர். விசுவுக்கு அந்த ஊர் மக்கள் வைத்த பெயர் 'சின்ன விசு'.

புலிகளின் அசைவுகளை எப்படியோ இந்தியப் படையினர் மோப்பம் பிடித்துவிடுவர். இருப்பினும் இந்தியப் படையினருக்கு 'தண்ணி காட்டிவிட்டு' காட்டுக்குள் உள்ள தமது அணிகளுக்கு உணவுப் பொருட்களையும், வேறு தேவையான பொருட்களையும் எடுத்துச்செல்லும் ஒருசில போராளிகளுள் விசுவும் ஒருவன்.

ஒரு தொகுதிப் பொருட்களை எடுத்துச் செல்லவேண்டுமெனில் இந்தியப்படையினருடன் பல சண்டைகள் பிடித்தே செல்ல வேண்டியிருக்கும். சிலவேளை பல சண்டைகளுக்குப் பிறகு அப்பொருட்களை இழக்கவேண்டியும் இருக்கும். அதற்கும் மேலாகப் பல உயிர்களையும் விலையாகக் கொடுக்கவும் நேரிடும்.

இப்படித்தான் ஒரு நாள் நெத்தலியாற்றுக் கரையிலிருந்து அறுபதுபேர் கொண்ட பெண்கள் அணி ஒன்றிற்கு உணவுப் பொருட்கள் தீரும் நிலையில் உள்ளது என விசுவுக்குத் தகவல் வந்தது. இராமநாதபுரத்தில் உள்ள ஆதரவாளர் ஒருவரின் மாட்டு வண்டியைப் பெற்றுக்கொண்டு ஜேம்சுடனும் இன்னுமொரு போராளியுடனும் சேர்ந்து உணவுப் பொருட்களை வண்டியில் ஏற்றிக் காட்டுவழியே நீண்ட தூரம் பயணித்து, பெண் போராளிகளின் தளத்தை அண்மித்தபோது, இந்தியப் படையினர் அம்முகாமைத் தாக்க காட்டுக்குள் இறங்கிவிட்டனர் என அறிந்த பெண் போராளிகள் தமது தளத்தினை கைவிட்டுச் சென்றிருந்தனர். அத்தளத்தினுள் பிரவேசித்தவர்களுக்கு விடயம் விளங்கிவிட்டது. கிணற்றடிவரை சென்ற விசுவுக்கு, மரம் செடிகளின் முறிவு ஒலியும், குரங்குகளின் கத்தல் ஒலியும் நிகழப்போகின்ற அனர்த்தத்தை உணர்த்தி நின்றன. நிலைமையை விளங்கிக்கொண்டு சுதாகரித்துக் கொண்ட விசு, "ஜேம்ஸ் வாற ஜுனியஸ் பொடியள் பசியோட வருவாங்கள். உடன் எடுத்துவந்த பொருட்களை இறக்கி சமைக்கத் தொடங்குங்கோ". விசுவின் பேச்சிலிருந்த மறைபொருளைத் தெளிவாக விளங்கிக் கொண்ட ஜேம்ஸ் வண்டிலை நோக்கி நடக்கத் தொடங்கினான். பின் மூவரும் வண்டிலை வந்தடைந்தனர். இவர்களின் நகர்வினைக் கண்காணித்துக் கொண்டிருந்த இந்தியப் படையினர் வண்டிலுக்குப் பின்னால் பின்தொடரத் தொடங்கினர். இதனை மூவரும் நன்கறிந்திருந்தனர். பல துன்பங்களுக்கு மத்தியில் எடுத்துவந்த இவ் உணவுப்பொருட்களை எப்படியாவது காப்பாற்றவேண்டும் என்ற விருப்பு அவர்களுக்கு: "எங்களைப் பின்தொடருறாங்கள் மச்சான், கடைசிவரைக்கும் இப்ப எங்களைச் சுடமாட்டாங்கள். எங்கட தளத்தை அறிவதுதான் அவங்களின்ரை நோக்கம்" விசு கூறியபோது, "வண்டிலை விட்டிட்டு இறங்கித் தப்பி ஓடுவம்" ஜேம்ஸ் கூறினான். மற்றப் போராளியும் அதற்கு ஆமோதிக்க வண்டில் நிறுத்தப்பட்டது. இந்தியப் படையினரின் துப்பாக்கிகள் 'சடசட'க்கத் தொடங்கின. துப்பாக்கியால் சுட்டபடியே அவர்கள் மூவரும் இறங்கி ஒரு பக்கமாக ஓடினர். இடையில் விசு காட்டுக்குள் பாதை மாறிவிட்டான். ஜேம்சும் மற்றப் போராளியும் தொட்டியடியில் ஏறியபோது விசுவைக் காணவில்லை. இரண்டு நாட்களின் பின்னர் முல்லைத்தீவுக் காட்டுப்புறத்தில் உள்ள சிறு ஊர் ஒன்றில் தனியாக விசு ஏறினான். பின் அவர்கள் ஒன்று சேர்ந்தபோது, "உங்களை நம்ப ஏலாது மச்சான். என்ர G-3 துப்பாக்கியத்தான் நம்பவேணும்" எனத் தனது துப்பாக்கியை முத்தமிட்டபடியே கூறினான் விசு. "சும்மா இரு மச்சான், மாடுகளை அவிட்டு விட்டவங்கள் மாடு போற திசையை நோக்கிப் பின்னாலேயே போய் எங்களுக்கு மாடும் வண்டிலும் தந்தவங்களைப் பிடிச்சிட்டாங்களாம். இனி சனம் என்னத்தைத் தந்தாலும் மாடுகளை மட்டும் தராது" ஜேம்ஸ் கூறினான். "அதுக்கென்ன, மணிகளுக்குப் பதிலாக இனி சயனைட்டைக் கட்டிவிடுவம்" விசு கூறியபோது அந்த இடம் சிரிப்பொலியால் நிறைந்திருந்தது.

- சி.மாதுளா -

இன்னும் ஒரு நாள், 1988ம் ஆண்டு வைகாசி மாதம் பழைய கண்டி வீதியினை இணைக்கும் கொக்காவில் சந்தியில் இந்தியப் படையினர் பதுங்கித் தாக்கியதில் புலிவீரன் ஒருவனுக்குக் கால் முறிந்துவிட்டது. வீதிவழியே 'அம்புலன்ஸ்' வண்டியில் எடுத்துச்செல்ல முடியுமா என்ன? இல்லையே. காட்டுவழியேதான் பாதை முறிக்கவேண்டும். கால் முறிந்தவனுக்கு உடனடிச் சிகிச்சையளிப்பதாயின் வட்டக்கச்சி செல்லவேண்டும். போகும் வழியில் இன்னொருவனுக்குக்கூட இன்னொரு இடத்தில் 'கால் முறியலாம்'. எப்படியும் போய்ச்சேர்ந்தாலும் மருத்துவரை அழைத்து வருவதென்பது கடினமான காரியம். ஒவ்வொரு உள்ளூர் மருத்துவரையும் இந்தியப்படையினர் தமது கண்காணிப்பில் வைத்திருந்தனர்.

தோள் கொடுத்தவனை, சிலவேளை உயிர் தந்தவனை, தப்பியோட வழியிருந்தும் நண்பனுக்காகச் சண்டையிட்டவனை, உணவு தனக்குக் கிடைக்கும் வேளை நண்பனுக்காக ஒருபிடி சோற்றை காற்சட்டைப் பையினுள் வைத்து எடுத்து வருபவனை, அந்தப் புலிவீரனை விட்டுச்செல்ல முடியுமா என்ன? "மச்சான், இவனுடன் நான் நிக்கிறன். நீங்கள் போய் 'டொக்ரர்' யாரையாவது கூட்டிக்கொண்டு வாங்கோ" என விசு கூறியபோது அவனின் G-3 துப்பாக்கியையும், அவனையும் நம்பி காயப்பட்ட போராளியை அவனுடன்

புலனாய்வுத்துறைத் தாக்குதல்
படையணித் தளபதி

**லெப். கேணல் விசு/அருமை**

(கனகராசா குலேந்திரன்)

மல்லாகம், யாழ்ப்பாணம்.

வீரச்சாவு: 27-09-1998




விட்டுவிட்டுச் சக தோழர்கள் காட்டுவழியே நகர்ந்தனர்.

யாரோ பாதகன் எதிரிக்குக் காட்டிக் கொடுத்துவிட்டான். அன்று அந்த ஊர் முழுவதும் சுற்றி வளைக்கப்பட்டது.... விசுவும், காயப்பட்ட போராளியும் சிறு பற்றையொன்றினுள் சருகுகளால் தம்மை உருமறைத்தபடியே அன்று முழுவதும் கிடந்தனர். இந்தியப் படையினரின் 'அந்த மணம்' மூக்கை அரித்தது. 'பீடிப்புகை' உணவு, நீர் இன்றியிருந்த வயிற்றைக் குமட்டியது. "அண்ணை, என்னாலை இனியும் வேதனையைத் தாங்கிக் கொண்டிருக்க ஏலாமல் கிடக்கு". விசுவின் காதோரம் காயப்பட்ட போராளி கூறியபோது, விசு அவனின் 'சயனைட்' குப்பியை வேண்டித் தன்னுடன் வைத்துக்கொண்டான். "என்ர G-3 யில இருக்கிற ரவைகள் முடிஞ்சபிறகு நீ வேணுமெண்டா குப்பியைக் கடி". விசு கூறினான்.

இந்தியப் படையின் கண்களில் அவர்கள் அகப்படாமல் போகவே தமது சுற்றிவளைப்பைக் கைவிட்டு இரவே இந்தியப்படையினர் தளம் திரும்பிவிட்டனர். இரவானதால் நிலமை அறிவதில் சிக்கல்கள் எழவே, காலையானதும் மருத்துவருடன் வந்த சக போராளிகளுக்கு முழுநாளும் அவர்கள்பட்ட வேதனைகளை அவர்களின் கண்கள் சொல்லி நின்றன.


இக்காலப்பகுதியில் விசுவுடன் தளத்தில் நின்ற ஜேம்ஸ் அவர்கள் நினைவு கூருகையில், "கடலில் நீந்தக் கற்றுக்கொண்டிருக்கும்போது ஒரு படகு எமக்கு அருகால் வந்துகொண்டிருக்குமானால் எமக்கு எவ்வளவு பாதுகாப்பு உணர்வு ஏற்படுமோ அப்படியோர் உணர்வு, விசு எம்முடன் கூடவந்தால் ஏற்படும்.... நாங்கள் எல்லோரும் நல்லாச் சண்டை பிடிப்பம். ஆனால் எங்களுக்கு சயனைட் குப்பியை எப்ப வாய்க்குள்ள வைக்கலாம் என்ற எண்ணம்தான் அலைகளாய் மனதில் ஓடிக் கொண்டிருக்கும். ஆனால் விவேகத்துடனும், கூடுதலான சகிப்புத் தன்மையுடனும் தன்னையும் துப்பாக்கியையும் நம்பி, 'வெல்வதற்காகவே சண்டையிடுகின்றோம்'என்ற உணர்வுடன் சண்டையிட்டுக்கொண்டிருப்பார் விசு" என்றார் மெல்லிய சிரிப்புடன்.




அந்த ஊர்களில் புலிகள் அணியின் வரவு என்பதும், நடவடிக்கைகள் என்பவையும் புதியவர்கள் பலரை போராளிகளாகப் புலிகள் அமைப்பில் இணைத்தன. ஓர் இடத்தில் குறைந்தது ஐந்து நாட்கள் இருந்தாலே இந்தியப்படைகள் மோப்பம் பிடித்துவிடுவர்.

இருந்தும் முப்பது புதியவர்களுக்கு அடிப்படைப் பயிற்சிகள் கொடுத்துப் போராளிகளாக்கும் பொறுப்பு விசுவிடம் வழங்கப்பட்டது. ஆயுதப்பயிற்சி, அரசியல் கல்வி, அடிப்படைத்தேவைகள் எல்லாமே விசுவின் கைகளில்தான்.

புதியவர்களுக்குப் பயிற்சி முடியும் காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. "காட்டுக்குள்ள மீண்டும் இந்தியப்படைகள் இறங்கப் போறாங்களாம்" விரைவாகச் செய்தி ஒன்று கிடைத்தது. "ஒரு தளத்தினை அமைப்பது என்பது அவ்வளவு இலகுவான பணியா? இல்லையே. கிணற்றில் இருந்து மண்சுமந்த நோவே முள்ளந்தண்டிலிருந்து இன்னமும் போகவில்லை. காட்டுக்குள் பொருட்களைச் சுமந்தெடுத்த சுமைகள் சுகமானதல்ல... எப்படியும் எதிரியின் நகர்வைத் தடுக்கவேண்டும். அல்லது எதிரி எம்மை அண்மிப்பதையாவது தெரிந்துகொள்ள வேண்டும்....." சிந்தித்த விசுவுக்கு மணலாற்றுக் காட்டிலிருந்து வந்த 'ஜொனி' மிதிவெடிகள் நினைவுக்குவர 1988 ஆவணி 26 அன்று புதிய போராளிகள் சிலரை அழைத்து, "மிதிவெடிகளை எடுத்துக்கொண்டு வாங்கோ" என்று கூறியவன் தன் புதிய போராளி அணியுடன் 'எதிரி வரலாம்' என எதிர்பார்த்த காட்டின் பாதைகளினூடே குறிப்பிட்ட தூரம்வரை நடந்திருந்தான். "உங்களுக்குப் பயிற்சியாகவும் இருக்கட்டும். அதேநேரம் எதிரிக்கு நீங்கள் வைக்கின்ற முதற் பொறியாகவும் இருக்கட்டும்" என புதிய போராளிகளிடம் கூறிய விசு, மிதிவெடி வைக்கப்பட்டுக்



கொண்டிருப்பதனை அருகில் நின்று அவதானித்துக் கொண்டிருந்தான். மிதிவெடி ஒன்றினைப் புதைத்த சிவம் அதனை உருமறைத்துவிட்டு



எழுந்தபோது மரவேர் ஒன்றில் கால் இடறுப்பட தான் மறைத்து வைத்த மிதிவெடியின் மேலேயே தவறுதலாக விழ..... "நான் ஓர் ஆபத்தான நண்பன்" என்பதை மிதிவெடி சொல்லியது. மிதிவெடியின் மேல் சிவம் விழப்போகிறான் எனத் தெரிந்ததும் சிவத்தைப் பிடிக்கப்போன விசுவின் வலக்கை முழங்கைக்கு சற்றுக் கீழ் துண்டாடப்பட்டது. இடக்கையில் விரல்கள் அனைத்தும் சிதறின. உடல் முழுவதும் காயங்கள். சிவம் சாவுடன் போராடிக்கொண்டிருக்க காயமின்றித் தப்பிய ஒருவன் தளத்துக்கு ஓடிச்சென்று தோழர்களுடன் திரும்பி வந்துகொண்டிருந்தபோது தன் தோழர்களைப் பார்த்து 'கைகளிரண்டும் இல்லை மச்சான்', 'கைகளிரண்டும் இல்லை மச்சான்' என அரை மயக்கத்துடன் கூறத் தொடங்கினான். முகத்தில் வேதனையைக் காட்டிக் கொள்ளவில்லை. மனதில் வேதனைகள் இல்லாதிருக்குமா என்ன?

நாற்பது கிலோமீற்றர் தூரத்திலிருக்கும் வடமராட்சிக் கரையோர எல்லையை நோக்கி காயப்பட்ட தம் சகதோழர்களுடன் கல்மடுவிலிருந்து புலிகளின் அணி ஒன்று புறப்பட்டிருந்தது. மெல்லிய உடற்கட்டையுடைய விசுவைச் சுமந்தவாறே போராளி ஒருவன் வேகமாக முன்னே நடந்து கொண்டிருந்தான்.

'தமிழ்நாடு'.

அறுவைச் சிகிச்சைகள் முடிவடைந்து கைகளுக்குப் போடப்பட்டிருந்த கட்டுக்களை அவிழ்க்கும் நாளும் வந்தது.

விரல்கள் இல்லாத இடக்கையின் பெருவிரலுக்கும், மோதிர விரலுக்கும் இடையே காணப்படும் பகுதியை வெட்டி விரல்போன்ற ஒன்றை மருத்துவர் உருவாக்கியிருந்தார். "டொக்டர், எனக்கொரு விரல் எப்படியும் உருவாக்கித் தரவேண்டும்" என அவன் மருத்துவரிடம் கேட்டது வீண் போகவில்லை.

1989 இன் நடுப்பகுதியில் அந்தப் பனைமரத்தின் ஓலைகள் மீண்டும் அவனுக்குத் தெரிந்தன. பிரிந்துசென்ற அனைத்தோடும் மீண்டும் சேரும் நாள் "நான் எவ்வளவோ நாட்டுக்காகச் செய்யவேண்டிக் கிடக்கு" தனக்கென உருவாக்கிய விரலை மீண்டுமொரு தடவை பார்க்கிறான். அந்தப் பனை மரங்கள் முழுமையாகத் தெரிந்தன. கரைசேர்ந்த படகிலிருந்து "தூக்கவா விசு அண்ணை" போராளி ஒருவன் கேட்க, "என்னால முடியும் மச்சான்" என்று கூறிவிட்டுக் கரையேறினான். அந்தப் பனைமரமும், ஓயாத அந்தக் கடலின் அலைகளும் தங்களுடன் அவனையும் தொடர்புபடுத்திப் பார்த்திருக்கும்.

மீண்டும் வன்னியில் விசு 3.7 எனும் குறியீட்டுப் பெயருடைய தளத்தில் போராளி அணி ஒன்றிற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டான். இங்கு அவன் துப்பாக்கி எடுத்துக் குறிபார்த்து தன் இலக்கை வீழ்த்தியபோது மருத்துவருக்கு மீண்டுமொருமுறை நன்றி கூறியிருப்பான்.

1990 இல் போராட்டத்தின் பட்டறிவு புலிகளின் புலனாய்வுச் செயற்பாட்டை நிறுவனப்படுத்தவேண்டிய தேவையினை தலைவர் அவர்களுக்கு ஏற்படுத்தியபோது அதற்காகத் தேர்வு செய்யப்பட்ட அணியில் விசுவும் இருந்தான்.

1990 யூன், இரண்டாவது ஈழப்போர் தொடங்கியதும் யாழ் - வன்னிக்கான தரைத்தொடர்பை சிங்களப்படையினர் ஆனையிறவில் துண்டித்தனர். கொம்படிப் பாதையே வன்னிக்கான தொடர்பானபோது, புலனாய்வுத்துறைப் போராளிகளின் போக்குவரத்து வேலைகளினையும், பொருள் மாற்றும் வேலையினையும் விசுவே பொறுப் பெடுத்திருந்தான். இக்காலப்பகுதியில் புலனாய்வு வேலை ஒன்றினை பொறுப் பெடுக்கும்படி புலனாய்வுப் பொறு ப்பாளர் அவர்கள் கேட்டபோது, "நான் சண்டைக்கெண்டாப் போறன் அம்மான். எனக்குப் புலனாய்வு வேலை சரிவருதில்லை". விசுவின் இம்மனநிலை பற்றி புலனாய்வுப் பொறுப்பாளர் கூறியபோது, "விசுக்கு புலனாய்வு அறிவு என்பது இயற்கையாகவே இருந்தது. தன்நம்பிக்கை என்பது அதைவிடப் பெரிதாக இருந்தது. ஆனால், அவன் ஏன் புலனாய்வு வேலைகளில் அதிக நாட்டம் கொள்ளவில்லை? இது எனக்குப் புரியாத புதிராகவே இருக்கிறது. எமது விடுதலைப்போரை நாம் வெல்ல வேண்டும் என்றால் புலனாய்வுச் செயற்பாடு எவ்வளவு முக்கியமானது என்பதை அவன் உணர்ந்திருக்க வேண்டும். ஆனாலும் சண்டைக்கான துறையில் அவன் இருந்ததால் அவன் முடிவு சரியானதுதான்". என்றார்.

விசுவின் மனநிலையறிந்த பொறுப்பாளர் விசுவுக்கு சண்டைக் களத்துடன் தொடர்புடைய பணியைக் கொடுக்கத் தொடங்கினர்.

1993 நவம்பர் 11இல் பூநகரி தரைப்படை மற்றும் கடற்படைக் கூட்டுத் தளங்கள் மீது 'தவளைப்பாய்ச்சல்' நடவடிக்கையைப் புலிகள் மேற்கொள்ளத் தீர்மானித்தபோது, வழங்கல் பணியை மேற்கொள்ளும் நடவடிக்கைப் பகுதி ஒன்றிற்கு விசு பொறுப்பாக நியமிக்கப்பட்டான்.

அன்று நீரேரியைக் கிழித்தவாறே அவனின் படகு விரைந்து வந்துகொண்டிருந்தது... திடீரென வானில் தோன்றிய எதிரியின் 'புக்காரா' வானூர்தி ஒன்று படகைநோக்கி வேகமாய்க் குத்திப்பதிந்தது. "டேய், அடிக்கப் போறான்ரா" எல்லோரும் நீருள் பாய்ந்து நீந்தத் தொடங்கினர். படகு நீருள் அமிழ்ந்து கொண்டிருந்தது. இல்லாத கைகளுடன் விசு கரையேறுவதற்காய் நம்பிக்கையுடன் போராடிக் கொண்டிருந்தான். அவனின் 'கோல் கொமாண்டோ' நீரினுள் அவனை விட்டுப் பிரிந்து கொண்டிருந்தது. கப்டன் வண்ணன் நீரோட்டத்துடன் போராடித் தோற்றுக் கொண்டிருந்தான். விசு வருவானா? என்பதைவிட 'அட விசுவுக்கு நீந்தக் கைகள் இல்லையே' என ஏங்கிய உள்ளங்களே அதிகம். ''இதயம் வெடித்து மீண்டும் அக்கடலேரியில் மிதந்து கொண்டிருந்தபோதும், அந்திசாயும் நேரம் அவன் வந்து கரையேறினான்.

பின் இன்னுமோர் புதிய பணி அவனுக்குக் கொடுக்கப்பட்டது. "வணிகம்'' ஐம்பது வீதம் பணம் இலாபம், ஐம்பது வீதம் புலனாய்வு இலாபம். அவன் தன் போராட்ட வாழ்வில் கண்டிராத புதியதோர் பணி.

சாரம், அரைக்கை சேட், அரும்பிய தாடி அவனை வணிகனாகக் காட்டிக் கொண்டிருக்க, ஒட்டிய உடலும், வெட்டிய கைகளும் அவனைப் போராளியாகவே காட்டிக் கொண்டிருந்தன.

இக்காலப்பகுதியில் விசுவுடன் பணியாற்றிய பணியாளர் ஒருவர் நினைவு கூருகையில், ''இந்த மனிசனிட்ட ஒரு குணமிருக்கு. அவரின் தனிப்பட்ட தேவைகளுக்காக எந்த உதவியை நாம் செய்து கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ளமாட்டார். ஒருநாள் நான் மலசல கூடத்துக்கு தண்ணீர் அள்ளிவைத்தேன். அத்தண்ணீரைக் கீழே ஊற்றிய அவர் சற்றுக் கோபத்துடன், "உங்களுக்குத் தருகிற ஊதியத்துக்கு இயக்கத்துக்கு வேலை செய்யுங்கோ, எனக்குக் கைகள் இருக்கின்றன. நீங்கள்தான் கைகள் இல்லை என்பதை அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொண்டு இருக்கிறியள்" அதுக்குப்பிறகு நான் எந்தப்பணிகளும் செய்து கொடுக்கிறதில்லை. அப்படி ஏதாவது செய்யத்தொடங்கினாலே 'பாணி' ஓட்டப்போகுது என அறுக்கவும் தொடங்கிடுவார்". என்றார்.

இக்காலப்பகுதியில் கிளாலி நீரேரியில் தன் ஆயுதமான 'கோல்கொமாண்டோ'வை இழந்த துயர விசுவை வாட்டிக்கொண்டிருக்க, போகுமிடங்கள் எல்லாம் கோல்கொமாண்டோ ஒன்றினைப் பொருத்தி எடுப்பதற்காக அதன் உதிரிப்பாகங்களைத் தேடிப்பெற்றுக் கொண்டான். "அண்ணை, உங்களுக்குக் கைகளும் இல்லை பிறகேன் ஆயுதம்" கேட்கக் கூடாத கேள்வியை போராளி ஒருவன் கேட்டேவிட்டான். "டேய் என்னதான் இருந்தாலும் சண்டை யிட்டுத்தான் நாங்கள் நாட்டைப்பிடிக்க வேண்டும்..... நாட்டைப் பிடித்த பிறகும் துவக்குத் தேவைப்படும்". 'வலிமையே வாழும்' என்ற பொதுவிதி விசுவின் உணர்வுகளுடன் பிரதிபலித்தது.

யூன் 05 விளக்குவைத்தகுளம் நோக்கிய சிங்களப்படைகளின் ஜெயசிக்குறு தாக்குதலில் மேஜர் குட்டி வீரச்சாவு அடைய, பின்கள வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த விசுவுக்கு புலனாய்வுப் பொறுப்பாள ரிடமிருந்து செய்தி வந்திருந்தது. "புலனாய்வுத்துறைப் படையணியைப் பொறுப் பெடுக்கவும்".

அணிப் பொறுப்பினை எடுக்கும்போது விசுவின் முன்னே எதிரியின் பாரிய நகர்வினைத் தடுக்கும் பொறுப்புடன் இன்னுமொரு பாரிய பொறுப்புமிருந்தது.

புலனாய்வை மட்டுமே பட்டறிவாகக் கொண்ட போராளிகள். 'துணிவு' மட்டுமே அவர்களுக்கான தகுதியாய் இருந்தது. ஏனைய அணிகள் தொடர்ச்சியாகச் சண்டைக் களங்களில் நின்றமையால் கூடுதலான சண்டை அனுபவம் கொண்ட போராளிகளைக் கொண்டிருந்தன.

எனவே, தன் அணிக்கும் உறுதியான ஓர் அடித்தளத்தை இட்டு சண்டைக்களங்களில் காத்திரமான பங்கைக் கொடுக்கவேண்டிய மற்றுமோர் முக்கிய பொறுப்பினையும் அவன் நன்கு விளங்கியிருந்தான். சிறந்த படையணிக்கு அடித்தளமிடுவதற்கான ஒவ்வொரு சிறு விடயங்களையும் தலைவர் அவர்கள் கூறுவதுபோல் தன்னிலிருந்தே ஆரம்பித்தான்.

**1989 இன் நடுப்பகுதியில் அந்தப் பனைமரத்தின் ஓலைகள் மீண்டும் அவனுக்குத் தெரிந்தன. பிரிந்துசென்ற அனைத்தோடும் மீண்டும் சேரும் நாள். ''நான் எவ்வளவோ நாட்டுக்காகச் செய்யவேண்டிக் கிடக்கு''. தனக்கென உருவாக்கிய விரலை மீண்டுமொரு தடவை பார்க்கிறான். அந்தப் பனை மரங்கள் முழுமையாகத் தெரிந்தன. கரைசேர்ந்த படகிலிருந்து ''தூக்கவா விசு அண்ணை'' போராளி ஒருவன் கேட்க, ''என்னால முடியும் மச்சான்'' என்று கூறிவிட்டுக் கரையேறினான். அந்தப் பனைமரமும், ஓயாத அந்தக் கடலின் அலைகளும் தங்களுடன் அவனையும் தொடர்புபடுத்திப் பார்த்திருக்கும்.**

விசுவின் கைகளுக் கிடையேயும் ஒரு மண்வெட்டி இருக்கும்: அந்த மண்வெட்டியும் தன்னால் முடிந்ததைச் செய்து கொண்டிருக்கும்.

ஒரு இரவு, வேவுக் காரன் பின்னால் வந்து அடிக்க எத்தனித்தபோது முதலில் தன் துப்பாக்கியை இயக்கிச் சண்டையிட்ட அந்தப்போராளி, "தம்பி உன்ர கோல்சரை கட்டிக்கொண்டு படு". அடிக்கடி விசு கூறுவதை நினைவுபடுத்திக் கொள்கிறான்.

"அண்ணா, எங்களுக்கு ஒரு சண்டையும் கொழுவுது இல்லை". காவலரணில் நிற்கும் போராளி ஒருவன் கேட்டான். "ஆமி என்ன வேவு பார்க்காமலேயே சண்டைக்கு வாறான்? நீங்கள் பலமாக இருந்தால் அவன் எப்படி வருவான்". தனக்குள்ளும் அக்கேள்வி இருப்பதை மறைத்தபடியே இயல்பாகக் கூறுவான்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# வாழ்வினைக் கரைத்து ...

(7ம் பக்கத் தொடர்)

"டேய், விசுவண்ணை காய்ச்சல்". காவலரணுக்குப் பொறுப்பான போராளி கூறுவான். "தம்பி இரண்டு பேரையும் பின்னுக்கு அனுப்பிவிட்டு அதை டம்மிப் பொயின்ற் ஆக்கு". "அதால ஆமி உடைச்சா?" "டேய், ஆமி உடச்சா நாங்கள் மூடி அடிப்பமடா". விசு கூறுவான். "அண்ணை இவன் மாறி எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தில சேர்ந்திட்டான்". ஒரு போராளி குத்தலாய்ச் சொல்ல, "மச்சான், சின்னச் சத்தம் கேட்டாலும் என்ன என்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கோ". கூறியவாறே விசு மறுகாவலரணுக்குச் செல்வான்.

"கனகாலத்துக்குப் பிறகு ஊருக்குள்ள வந்திருக்கிறம்". பின்னால் இருந்த அறிவிடம் விசு கூறினான். வீதியில் கண்ட தெரிந்தவர் அவனை மறித்து, "என்ன விசு, கண்கள் எல்லாம் உள்ளபோயிட்டுது". "எங்கட கண்கள் உள்ள போனதால்தான் ஆமியும் உள்ளவராமல் இருக்கிறான்". அதில் நிறைந்திருந்த ஆயிரம் கருத்துக்களை அந்தப் பொதுமகனால் அந்தக் கணத்தில் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

ஊருக்குள் வந்த அவன் அன்று மாலையே தன் வாழ்விடத்திற்குத் திரும்பி விடுவான். தன் பிள்ளைகளுக்கென கச்சான்கூட வாங்கிச்செல்ல அவன் கையில் பணம் இருக்காது. அன்று அந்தப் பழைய உந்துருளிக்குக் காற்றுப்போனது. ரியூப்புக்கு ஒட்டுப்போட பணம் வேண்டும் என்ன செய்வது? அவன் தோற்றத்தைப் பார்த்தே யார் என விளங்கிக்கொண்ட அந்த ஒட்டுவேலை ஐயா அவனிடம் பணம் கேட்கவுமில்லை.

"விசு அண்ணை வந்திட்டார்". தொலைத்தொடர்பு சாதனங்களினூடாக போராளிகள் கதைத்துக் கொள்வார்கள். அவர்களுக்கும் இனம்புரியாத தெம்பு ஏற்படும்.

1997 டிசம்பர் 03 மன்னகுளப் பகுதியினூடாக எதிரி நகர்வதற்கான சாத்தியத்தை அடுத்து விசுவின் அணிகள் மன்னகுளப் பகுதிக்கு மாற்றப்பட்டன.

வீதியின் வலது பக்கத்திலிருந்து குளத்தின் அணைக்கட்டை ஒரு பக்கம் பாதுகாப்பு வேலியாக்கி அதில் ஓர் அணியையும், வீதியின் இடப்பக்கமாக (கனகராயன்குளப் பகுதி) இன்னொரு அணியையும் விசு பிரித்து விட்டிருந்தான். வீதிக்குக் குறுக்காக மாலதி படையணி நிலைகொண்டிருந்தது. அடுத்த நாள் 97 டிசம்பர் 04, சூரியன் மேலெழுந்து கொண்டிருந்த நேரம் மன்னகுள வீதியை ஊடறுத்த சிங்களத்தின் அதிசிறப்பு கொமாண்டோ அணியினர் வீதிக்கு அருகாக ஒரு கிலோமீற்றர் வரை முன்னேறி இருந்தனர். "எங்களுடைய முதற்கட்டப்பணி முடிவடைந்து விட்டது. கண்டி வீதியில் ஏறப்போகின்றோம்". சிங்களத் தளபதி ஒருவன் தன் கட்டளைப் பீடத்திற்கு அறிவித்துக் கொண்டிருந்தான்.

எதிரி ஊடுருவிய பிரதேசத்தினுள் ஒரு காவலரண் மட்டும் பிடிபடாமல் இருந்தது. அக்காவலரணில் இருந்த மேஜர் நீலாம்பரி தனியாக நின்று எதிரியுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தாள். "சாண்டிலியன், நான் விசு கதைக்கிறன். உடைத்த காவலரண்களை மீண்டும் பிடித்து மற்ற அணிகளோட லிங் பண்ணுங்கோ..."

"ஒரு காவலரண் ஆமியிட்ட பிடிபடாமல் இருக்கு. அதில எங்கட பிள்ளை ஒன்று தனியாக நின்று சண்டை பிடித்துக்கொண்டிருக்கு. ரவையைப் பார்த்து அடியுங்கடா". முன்னே சென்றுகொண்டிருந்த அணிகளுக்கு விசு கட்டளையிட்டுக் கொண்டிருந்தான்.

"மறுபுறத்தில், ஆப்பிழுத்த குரங்கின் கதையாய் வந்த இடம் செல்லவே வழிதெரியாதிருந்த சிங்களத்தின் 53ஆவது படையணி கொமாண்டோக்களுக்கு அமெரிக்காவின் "கிரீன்பரே" படையணி கொடுத்த பயிற்சிகள் புலிகளின் தாக்குதலின் முன்னே கைகொடுக்கவில்லை. ஒரு கல்வீட்டின் உள்ளேயே சுற்றிச்சுற்றி ஓடிக்கொண்டிருந்த கொமாண்டோக்களுக்கு அந்தக் கல்வீடே கல்லறையானது. "உதவிக்கு படைகள் அனுப்புகிறோம்" என சிங்களத் தளபதிகளிடமிருந்து பதில் வந்ததே தவிர படைகள் வரவேயில்லை.

எங்கிருந்தோ வந்த குண்டின் சிதறல்கள் விசுவின் தோள்மூட்டிலும், காலிலும் காயத்தை ஏற்படுத்தின. உதவித் தளபதி அறிவின் குரல் வோக்கியில் கேட்கத்தொடங்கியது. உதவிக்கு வந்த சக அணிகளுடன் இணைந்து எதிரியால் பிடிக்கப்பட்ட காவலரண்கள் அனைத்தும் மீளவும் கைப்பற்றப்பட்டன. ஒன்பது மணிநேர சண்டையின் முடிவில் தனது நாநூறு அதிசிறப்புக் கொமாண்டோக்களை சிங்களத்தின் 53ஆவது படையணி இழந்திருந்தது. அந்த நாள் சிங்களத் தளபதி சிறிலால் வீரசூரியாவுக்கு மட்டுமல்ல, சிங்களத்தின் புகழ்பூத்த 53ஆவது படையணிக்கும் என்றுமே மறக்கமுடியாத நாள்.

"அறிவண்ணை, விளக்கு வைத்தகுளத்தில் G.P.M.G யை எதிரியிடம் பறிகொடுத்த அவமானத்தை எங்கட இரத்தத்தால் கழுவியிருக்கிறம்". மருத்துவமனையில் வைத்து அறிவிடம் விசு இப்படித்தான் கூறினான்.

மீண்டும் படைவேலி வாழ்க்கை. மழையும் தன் வீச்சைக் கடுமையாக்கி இருந்தது. "பதுங்குகுழி வெட்டினா நனையத்தான் வேண்டும். அது வியர்வையாலா? மழையாலா? என்பதைக் காலநிலைதான் தீர்மானிக்கவேண்டும்". தெப்பலாய்த் தோய்ந்திருந்த போராளி ஒருவன் கூறிக்கொண்டிருந்தான். சின்னவயதில் தலைக்குப் பௌடர் போட்டு அதற்கும் ஈரம் காய்திருக்காது என எண்ணி சாம்பிராணிப் புகைபோடும் எங்கள் அம்மாக்களின் அந்தப் பிள்ளைகள் தலைதுடைக்க சிறு துண்டுகூட இல்லாமல் தாய்நாட்டிற்காக நனைந்து கொண்டிருந்தார்கள். விசுவும் காய்வான், நனைவான். தலை துடைக்க சிறு துண்டல்ல கைகள் இன்றியும் சிரமப்படுவான்.

தொடர்ச்சியாகக் கஞ்சி அல்லது கத்தரிக்காயும் சோறும்தான் உணவாக வந்து கொண்டிருக்கும். "மச்சான், எலும்பெல்லாம் தெரியுது. காயப்பட்டாலும் எக்ஸ்ரே எடுக்க செலவு மிச்சம்தான்". என்றவாறே, "ஏதாவது அயிற்றம் போடுவம்" விசு கூறுவான். ஏதாவது மிருகங்களை வேட்டையாடுவதற்காக இருவர் புறப்படுவார்கள். சிலநேரம் மான் வரும், சிலநேரம் "அண்ணை, சுட்டம் ஓடிற்றுது" என்ற பதில் வரும்.

"டேய் அது மானடா, அதுக்கு நாலுகாலடா, சுட்டுப் படாட்டா, அது ஓடும்தானடா". எங்கும் சிரிப்பொலி எழும்.

கொம்பனி மேலாளர் என்ற நிலையிருந்து மாங்குளப் பகுதிக்கான முழுமையான பொறுப்பாளராகக் கட்டளைப் பீடத்தினால் அவன் நியமிக்கப்பட்டான்.

ஒருசில மறிப்பு வேலியை மட்டும் பாதுகாக்கக் கட்டளையிட்டுக் கொண்டிருந்தவனுக்குப் பல கிலோ மீற்றர்கள் மறிப்பு வேலியை எதிரி உடைக்காமல் பாதுகாக்கக் கட்டளையிடவேண்டிய முக்கிய பொறுப்பு... அவன் ஒரு பொதுவான பொறுப்பாளனாக மாறியிருந்தான்.

98 யூன் 05, அன்றிரவு 'எல்' வடிவில் ஒலுமடுப் பக்கமாகத் திரும்பும் புலனாய்வுத்துறைப் படையணி பாதுகாத்த மறிப்பு வேலியில் அமைக்கப்பட்டிருந்த போலிக் காவலரணின் உள்ளே (டம்மிப் பொயின்ற்) எதிரிப்படையின் வேவுக்காரர் வந்துசென்ற தடயங்கள் தெரிந்தன. விடயம் உடனடியாக விசுவுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. "கவனமாக இருங்கோ, அதுக்குள்ளால எப்படியும் நுழையப் பார்ப்பான்".

'98 யூன் 06 - பட்டப்பகல் பொழுதில்.... அலட்சியமாக இருக்கும் அந்த ஒரு நிமிடமே எதிரி உன்னைத் தேடிவரும் நேரமாக இருக்கலாம். தலைவர் அவர்கள் கூறியதை பட்டறிவில் அவர்கள் அன்று புரிந்துகொண்டார்கள். வளைவாகச் சென்ற நகர்வு அகழிக்கு மையத்தில் அந்தப் போலிக் காவலரண் அமைந்திருந்தது. எதிரிக்கு வாய்ப்பாகப் போய்விட்டது.

குறிப்பிட்ட தூரம்வரை சென்று வளைவுப் பகுதியில் நின்று துப்பாக்கியை நீட்டினால் எதிரியின் துப்பாக்கி சடசடக்கத் தொடங்கிவிடும். எதிரி கடுமையாக நின்று போரிட்டுக் கொண்டிருந்தான். அறிவுக்கு விசுவிடம் இருந்து கட்டளைகள் வந்துகொண்டிருந்தன. களநிலைமை போராளிகளுக்குச் சாதகமாக மாறியது. பகல் பொழுதில் புலிகளின் துப்பாக்கிக் குறியில் இருந்து தப்பியோடுவதே எதிரிக்கு கடினமான பணியாக இருந்தது.

ஜெயசிக்குறு எதிர்ச்சமர் வரலாற்றில் அந்த முப்பது நிமிடச் சண்டையும் முக்கிய இடத்தைப் பெற்றது.

ஜெயசிக்குறுப் படைகள் 98 பெப்ரவரி 04க்குள் கண்டிவீதியைப் பிடித்து யாழ்ப்பாணத்தில் உள்ள சிங்களப் படைகளுக்கான விநியோகத்தை ஏற்படுத்திவிடுவர் என்ற பதில் பாதுகாப்பு அமைச்சரின் காலக்கெடுவை ஏழு மாதங்கள் கடந்திருந்தன. மாங்குள



நகரினைக்கூட கைப்பற்ற முடியாமல் சிங்களப்படைகள் திணறிக் கொண்டிருந்தன.

சிங்களப் படைகள் போய்ச்சேர வேண்டிய கிளிநொச்சி நகரினை மீண்டும் கைப்பற்ற நாள் குறித்தபோது, அதற்கான பயிற்சிகளில் விசுவின் அணியும் ஈடுபட்டுக்கொண்டிருந்தது. கிளிநொச்சி சிங்களப் படைத்தளம் ஏறக்குறைய 20 கிலோமீற்றர் சுற்றுவட்டத்தினைக் கொண்டிருந்தது. கண்டி வீதியைத் தன்னகத்தே உள்ளடக்கி முப்பது மீற்றருக்கு ஒரு காவலரண், நகர்வு அகழிகள், முட்கம்பி வேலிகள், பதுங்கு குழிகள் எனப் பதினாறுக்கும் மேற்பட்ட மினிமுகாம்களையும் தன்னகத்தே கொண்டு சிங்களத்தின் புகழ்பூத்த 54ஆவது படையணியின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த பெரும் படைத்தளமாக அது விளங்கியது.

"இந்தப் படைத்தளத்தை அழிக்க வேண்டுமாயின் படைத்தளத்தின் விநியோக வழியை அடைக்கவேண்டும். விநியோக வழியை அடைக்க வேண்டுமாயின் பரந்தன் பகுதியில் கண்டி வீதியைத் துண்டாட வேண்டும்.

கண்டி வீதியைத் துண்டாடும் பணியைக் கேணல் பால்ராஜ் அவர்கள் தலைமையிலான அணிகள் பொறுப்பெடுத்திருந்தன. அவரின் அணிகளைக் கண்டிவீதிக்கு அனுப்பப் பாதை உடைத்துக் கொடுக்கவேண்டும். பாதை உடைத்தெடுத்து அகட்டிக் கொடுக்கும் பணி விசு தலைமையிலான புலனாய்வுத்துறைப் படையணிக்கு வழங்கப் பட்டிருந்தது.

'ஓயாத அலைகள்-2' 1998 செப்ரெம்பர் 27, அதிகாலை 1.20, டோபிடோ வெடிக்க, முட்கம்பி வேலி துண்டாடப்படுகிறது. முட்கம்பி வேலிகளை அகற்றி உள்ளே புகுந்த அணிகளில் ஒரு அணி விசு தலைமையில் வலப்பக்கமாகவும் (டிப்போ வீதிப்பக்கம்), இன்னுமோர் அணி அறிவு தலைமையில் இடப்பக்கமாகவும் (பரந்தன் பகுதி) பிரிந்துசென்று பத்தே நிமிடங்களில் தடைகள் உடைக்கப்பட்டு பின் இடம், வலமாக ஒரு கிலோமீற்றர் தூரமான படைவேலிகள் உடைக்கப்பட்டுப் பாதை கொடுக்கப்பட கண்டிவீதியைத் துண்டாடும் அணி தனது வேலையைச் சரிவரச் செய்தது.

நாலு திசைகளிலிருந்தும் புலி அணிகளின் பாச்சலாலும், எறிகணை வீச்சாலும் படைத்தளம் சிதைந்து கொண்டிருந்தது. வெட்டையான இடங்களினூடாக முன்னேறிய விசுவின் அணி உருத்திரபுர வீதியின் அருகே இருந்த அந்த மாடிவீட்டின் பக்கத்து காவலரணையும் கைப்பற்றி இருந்தது.

நேரம் பகல் 1.30 மணி. முதல் நாள் இரவு முழுவதும் விழித்திருந்து சண்டையிட்ட களைப்பு ஒவ்வொரு போராளியின் முகத்திலும் தெரிந்தது. விசு காவலரண் ஒன்றிற்குள் இருந்தான். எதிரியின் துப்பாக்கி ரவைகள் காவலரணில் பட்டுத் தெறித்துக் கொண்டிருந்தன. காவலரணின் ஓட்டையினூடே, உள்ளே ரவை ஒன்று பட்டுத் தெறித்து விசுவின் மார்பினைத் துளைத்து நின்றது.

அந்த நிமிடம் நடக்கப்போவதை விசு உணர்ந்தான். தன் கோல் கொமாண்டோ துப்பாக்கியை அருகில் நின்ற போராளியிடம் கொடுத்தான். "தம்பி, பிடிச்ச இடங்கள திருப்பி அவன் பிடிக்க விடாதீங்கோ, நிலைமையை அறிவுக்குத் தெரியப்படுத்துங்கோ". அவன் கூறிக் கொண்டிருந்தபோதே மெல்லமெல்ல அவன் உடல் இயக்கம் அந்தப் படைத்தள அழிப்பின் வெற்றிச் செய்தியை கேட்காமலேயே நின்றுவிட்டது.

என்ன திடீர் முடிவு என நினைக்கிறீர்களா? என்ன செய்வது, அவன் வாழ்விலும் தொடரிசைக் குறிக்குப்பதிலாய் முற்றுப்புள்ளி விழுந்துவிட்டது.

விளக்குவைத்த குளத்தில் அணியைப் பொறுப்பெடுத்தபோது தன் முன்னே இருந்த இரண்டு பொறுப்புக்களையும் செய்துமுடித்த நிறைவு அவன் முகத்தில் தெரிந்தது.

பதினைந்து வருடங்கள் விடுதலைக்காக உழைத்த அந்தத் தீக்குச்சி வெளிச்சத்தை ஏற்றிவிட்டு மறைந்துவிட்டது. அவன் பெயரால் அவன் போன்றவர்களுக்கு புலனாய்வுத்துறையில் ஓர் அறிவுக்கூடம் எழுந்து நிற்கின்றது. வன்னி மண்ணில் ஆலங்குளம் துயிலுமில்லம் பிள்ளையென அவனைச் சுமந்து நிற்கின்றது. உங்கள் சுவாசக் காற்றையே இனிவரும் சந்ததியும் சுவாசிக்கப் போவதால் கால நதியில் உங்கள் வரலாறே தமிழன் வரலாறாய் என்றும் நிலைக்கும்.

*"தோழனே சாவுக்குள் நின்று*
*உழைப்பவர்களுக்கு சாவின் பின்னும்*
*நிச்சயமாவது இலக்கின்*
*வெற்றி மட்டுமே".*

# தீர்வும் சமாதானமும்

## அடிப்படை விடயங்கள்

கலாநிதி க.சோமஸ்கந்தன்

நல்ல ஆரம்பம் பாதிப்பங்கு நிறைவேறியதற்குச் சமம் என்பது நாட்டார் மொழி. இராசதந்திரப் பேச்சுவார்த்தைகளுக்கு இது பொருத்தமானதல்ல. ஆரம்பத்தில் தென்பட்ட உற்சாகம், நம்பிக்கை, எதிர்பார்ப்புக்களின் நிறைவு என்பன இறுதிக் கட்டம்வரை நிலவவேண்டும். தவறின் நல்ல ஆரம்பம் நன்மை தராது. விட்டுக் கொடுப்புக்கள் மூலம் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஏதோ வரப் போகிறது என்ற எதிர் பார்ப்பில் ஒரு பகுதி மாத்திரம் விட்டுக் கொடுப்புச்செய்ய இயலாது. இது சரண்புகும் நிலைக்கு இட்டுச் செல்லும். அதுவரை காத்திராமல்

வழங்கல் தமிழர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய மாட்டாது.

ஆகஸ்து 1996இல் தான் உத்தேசித்திருக்கும் அரசியல் சாசன வரைவில் 76(1) இடம் பெறமாட்டாது என்று சந்திரிகா உறுதிமொழி வழங்கினார். ஆனால் வழமைபோல் இந்த உறுதிமொழி காற்றில் பறக்க விடப்பட்டது. அவர் தயாரித்த வரைவில் 76(1) எண்மாற்றம் செய்யப்பட்டு 92 என்ற இலக்கத்துடன் இணைக்கப் பட்டது. 1978ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை அதிகாரப் பகிர்விற்கு எதிரான தடைக்கல்லாக 76(1) நிற்கின்றது.

அந்தஸ்தை பின்வருமாறு விபரிக்கின்றது: அவர்தான் நாட்டின் தலைவர். நிறைவேற்று அலகின் தலைவர். ஆயுதப் படைகளின் பிரதம தளபதி. இதனோடு சாசனத்தின் சரத்து நான்கையும்(4) இணைத்துப் படிக்கவேண்டும். சரத்து 4: ''சிறிலங்காவின் பாதுகாப்பு உட்பட, மக்களின் நிறைவேற்று அதிகாரங்கள், மக்களால் தெரிவு செய்யப்பட்ட இக்குடியரசின் ஜனாதிபதியால் நிறைவேற்றப் படுகின்றன'' நாட்டின் பாதுகாப்பு விவகாரங்களுக்கு ஜனாதிபதி மாத்திரம் பொறுப்பு. இப் பொறுப்பை தன்வசம் வைத்திராமல் எதிர்க்கட்சி

நெருங்கிய பாதுகாப்பு மற்றும் இராணுவப் பயிற்சி உறவுகளைப் பேணுவோம் என்றும் பிரகடனத்தின் மிகுதிப்பகுதி கூறுகின்றது. கயிற்றில் நடப்பவனுக்கு பாதுகாப்பாக இருக்கும் தாங்கிப்பிடிக்கும் வலைபோல - SAFETY NET - இந்த அம்சம் உதவுமென அரசு நம்புகின்றது. அதாவது பேச்சுக்கள் முறிந்து போர் மீண்டும் வெடிக்குமாயின், இந்த வலை பாதுகாப்பு வழங்கும் என்பது அரசின் திட்டம்.

அரசின் கொள்கைப் பிரகடனத்தை விமர்சித்த மேற்குலக வானொலி, அரசின் வட- கிழக்கு மீதான 'வர்த்தகச் சுற்றிவளைப்பு' பூரண வெற்றி அளித்துள்ளதாகக் கூறுகின்றது. அரசியல் சுற்றிவளைப்பு தொடங்கிவிட்டது என்று கூறும் அதே வானொலி பிரதமருக்கும்

கூறினார். 1930 நடுப்பகுதியில் முதன்முறையாக யாழ்ப்பாணம் வந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா யாழ் மத்திய கல்லூரியில் நடந்த வைபவத்தில் பல்லின நாடுகளுக்கு சமஷ்டி அரசமைப்பு மிகவும் பொருத்த மானது என்று பேசினார்.

வட- கிழக்கு தமிழர் களைப் பொறுத்தளவில் சுயநிர்ணய உரிமை, தமிழர் தாயகக் கோட்பாடு, தமிழர் பாதுகாப்பு என்பன அடிப்படைக் கோரிக்கைகளாக அமைகின்றன. இதில் ஒன்றையாவது விட்டுக்கொடுக்கும் வாய்ப்பு இல்லை. 1978இன் அரசியல் சாசனம் ஒற்றையாட்சி, பௌத்தமத முன்னுரிமை என்பவற்றை வலியுறுத்துகின்றது. தமிழர் தாயகக் கோட்பாடு, தமிழர்கள் ஒரு தேசிய இனம், அவர்களுக்கென்று பிரத்தியேக




முறித்துக்கொள்ளுதல் மேல்.

பொதுவாகப் பேச்சு வார்த்தைகளின் தோல்விக்கு 'சரியாக ஆரம்பித்து அரை வழியில் கைவிடுதல்' START RIGHT GIVE UP HALF WAY - முக்கிய காரணமாக இருக்கின்றது. இத்தீவின் கடந்தகாலப் பேச்சுக்கள் இதற்கு உதாரணமாக அமைகின்றன. என்ன பேசப் போகிறோம் என்று உறுதிபடக் கூறும் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கத் தவறுதல், அதிகார வலுவற்றோருடன் பேச்சுக்களில் ஈடுபடுதல், அடிப்படை விடயங்களை இனங்கண்டு அவைபற்றிப் பேசாமல் விடுதல் போன்றவை அரைவழியில் கைவிடுதலுக்குக் காரணமாக அமைகின்றன.

இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வுதான் நிவாரணம் என்றால் இப்போது நடை முறையில் இருக்கும் 1978ஆம் ஆண்டின் அரசியல் சாசனம் தடங்கலாக இருக்கிறது. ''பாராளு மன்றம் தனது சட்டமியற்றும் வலுவை எந்த வகையிலேனும் கைவிடவோ, உரிமைமாற்றம் செய்ய முடியாதென்றும், சட்ட மியற்றும் பிறிதோர் அதிகார சபையை நிறுவ முடியாதென்றும்'' இச்சாசனத்தின் சரத்து 76 பிரிவு (1) கூறுகின்றது. இச்சாசனத்தின் பிரிவுகளில் ஒன்றாக இது அமைகின்றது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்களிப்பு

1978 இன் சாசனம் இன்னும் பல முரண்பாடுகளுக்கு வழிவகுக்கின்றது. சட்டரீதியான ஆட்சி அதிகாரங்கள் நிறைவேற்று அதிகாரங்களின் இருப்பிடமான ஜனாதிபதியின் கைகளில் உள்ளன. பாராளு மன்றத்தின் தலைவரான பிரதமரின் அதிகாரங்கள் ஒப்பீட்டில் மிகவும் குறைவு. பாராளுமன்றத் தேர்தல்கள் முடிந்த ஒரு வருடத்தின்பின் பிரதமர் தலைமையிலான ஆட்சியைக் கலைக்கும் உரித்து ஜனாதிபதிக்கு உண்டு. சரத்து 32(3) இற்கு அமைவாக பாராளு மன்றத்தில் பிரசன்னம் தரவும், உரையாற்றவும் ஜனாதிபதிக்கு உரிமை உண்டு.

இன்றைய நிலையில் ஜனாதிபதியும் பிரதமரும் வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களாகவும், வெவ்வேறு காலப்பகுதிகளில் மக்களால் தெரிவுசெய்யப் பட்டவர்களாகவும் அமைகின்றனர். தமது அரசியல் கட்சிகளின் நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இருவரும் முட்டிமோதுகின்றனர். இதன் காரணமாக இனப் பிரச்சினை தீர்க்கப்படுமா என்ற கேள்வி எழும் வாய்ப்பு உண்டு.

பிரதமரின் கட்சியான

அமைச்சரிடம் ஒப்படைத்தது, செல்லுபடியாகுமா என்று கேட்கப்படுகின்றது.

பாதுகாப்பு விவகாரங்களை ஜனாதிபதி முற்றாகக் கைவிடவில்லை. பதவி உயர்வு, பதவி நீடிப்பு போன்றவற்றில் அவருடைய தலையீடு காணப்படுகின்றது. தனக்கு விசுவாசமான அணியை உருவாக்குவதற்காக இளைப் பாறும் நிலைக்கு வந்த கடற்படைத் தளபதிக்கு மூன்று வருடகாலப் பதவி நீடிப்பு வழங்கியுள்ளார். இவ்வளவு நீண்ட நீடிப்பு சிறிலங்கா பாதுகாப்புத்துறை வரலாற்றில் முன்னெப்போதும் வழங்கப்படவில்லை. இராணுவத் தளபதிக்கும் ஒருவருட நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபராகத் தனக்கு விசுவாசமான ஒருவரை ஜனாதிபதி நியமித்துள்ளார். ஒரு குறிப்பிட்ட நோக்குடன் அவர் வியூகம் அமைக்கிறார் என்பதை உணர முடிகின்றது.

ஜனாதிபதிக்கும் இடையில் நிலவும் முறுகல் நிலை முடிவுக்கு வந்தால் மாத்திரமே அது வெற்றியளிக்கும் என்று சுட்டிக்காட்டுகின்றது. அரசியல் சுற்றிவளைப்பு வெற்றிபெறும் போது ஈழத்திற்காக எழும்குரல் தானாகத் தணிந்துவிடும் என்று அந்த வானொலி (வொய்ஸ் ஒப் அமெரிக்கா) மதிப்பிடுகின்றது.

ஜூன் 23,2002 ஆம் திகதி சண்டே லீடர் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் சிறிலங்காவுக்கான அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ் இவ்வாறு கூறுகிறார்: சமஷ்டி அரசு முறையின் முக்கிய அம்சங்களில் ஒன்றான ஜனநாயகம் உறுதி செய்யப்படுகின்றது. சாசன ஒழுங்கு சரிவரச் செய்யப்பட்டு மத்திய அரசு விதிக்கும் வரிகள் செய்யும் செலவுகள் என்பனவோடு மாநில அரசு விதிக்கும் வரிகள், செய்யும் செலவுகளும் நிர்ணயிக்கப்படவேண்டும். மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையிலான அதிகாரச் சமன்பாடு திருப்திகரமாக அமையவேண்டும். பிரிந்து செல்வது சமஷ்டியில் சாத்தியமில்லை. எங்களுடைய சமஷ்டி ஒழுங்கமைப்பை நாம் மிகவும் விரும்புகிறோம். உலக நாட்டு மக்கள் எம்மிடம் ஆலோசனை கேட்டால் நாம் அதை சிபாரிசு செய்கிறோம். இதுதான் சிறந்தது என்று சிறிலங்கா உட்பட யாதொரு நாட்டிற்கும் நாம் கூறுவதில்லை.

ஏப்பிரல் 2000இல் ஆனையிறவுப் படைத்தளம் புலிகள் வசம் வந்தபின் சிறிலங்காவுக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் தெரசிற்றா சாபர் (1992 - 1996) ''தளர்ச்சியாக இணைக்கப்பட்ட இரு நாடுகள் சமஷ்டி அமைப்பு'' சிறிலங்காப் பிரச்சினைக்கு தீர்வாக அமையலாம் என்று கருத்துக்

உரிமைகள் உண்டு என்பனவற்றை அது ஏற்க மறுக்கின்றது. யாழ் குடாநாட்டில் 35 வீதமான தரைப்பரப்பு உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் சிங்கள இராணுவத்தால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளது. ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் உள்நாட்டு அகதிகளாயுள்ளனர். மீள்வாழ்வு என்பது அகதிமுகாம் வாழ்வல்ல.

நிதி மற்றும் நீதிப் பிரிவுகள் உள்ளடங்கலான நிர்வாகக்கட்டமைப்பு, சட்டம் ஒழுங்கிற்குப் பொறுப்பான காவல்துறை, தரைப்படை மற்றும் கடற்படை உள்ளடங்கலான தமிழீழ இராணுவம் போன்ற சிறப்புக்களுடன் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் திகழ்கின்றன. இது உலகறிந்த விடயம். பேச்சுவார்த்தைகளின் போது இவை அங்கீகரிக்கப் படவேண்டும். தனிநாட்டுக் கோரிக்கைக்கு மாற்றீடாக வட-கிழக்கு சுயாட்சி பற்றிய பேச்சுக்கள் எழும்போது நிர்வாகக் கட்டமைப்பு, காவல் துறை, நீதிமுகாமைத்துவம், சுயஇராணுவப் பாதுகாப்பு ஆகியவை உறுதிப்படுத்தப் படவேண்டும். இவற்றைக் கைவிடுதல், குழைத்தல் அல்லது களைதல் என்ற பேச்சுக்கே இடமில்லை.

> இன்றைய நிலையில் ஜனாதிபதியும் பிரதமரும் வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களாகவும், வெவ்வேறு காலப்பகுதிகளில் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களாகவும் அமைகின்றனர். தமது அரசியல் கட்சிகளின் நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இருவரும் முட்டிமோதுகின்றனர். இதன் காரணமாக இனப் பிரச்சினை தீர்க்கப்படுமா என்ற கேள்வி எழும் வாய்ப்பு உண்டு.

மூலம் இதை மாற்ற முடியும். ஆனால் கொழும்பு அரசியல் நிலவரம் வித்தியாசமாகக் காணப்படுகின்றது.

தனது சுயதேவைகளுக்காக 1978 இன் சாசனத்தை உருவாக்கிய முன்னாள் அதிபர் ஜெயவர்த்தனா 76 (1) பற்றி, ''சமஷ்டியின் உள்நுழைவைத் தடுக்கும் பூட்டிய கதவு'' என்று கருத்துக் கூறினார். இச்சரத்து சாசனத்தில் இருக்கும்வரை அர்த்தமுள்ள அதிகாரப் பங்கீடு செய்யமுடியாது. இறைமைப் பங்கீட்டை அது முற்றாகத் தடுக்கிறது. 76 (1) அகற்றப் படாமல் செய்யப்படும் எந்தவொரு தற்காலிக அல்லது நிரந்தர நிர்வாகம் அரசமைப்பிற்கு முரணானது மட்டுமல்ல சட்ட வலுவுமற்றது. இப்படியானதொரு

ஐக்கிய தேசிய முன்னணி ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு எடுத்த முயற்சிகள் படுதோல்வியில் முடிந்துள்ளன. ஜனாதிபதி நியமித்த உயர்நீதிமன்ற நீதியரசர்கள் தமது நன்றி விசுவாசத்தைக் காட்டும் நோக்கில் பிரதமர் கொண்டுவந்த 18, 19 ஆம் அரசியல் சாசனத் திருத்தங்களை நிராகரித்தனர். சற்று அடங்கியிருந்த ஜனாதிபதிக்கு இது புதுத்தெம்பூட்டும் சந்தர்ப்பமாக அமைந்தது. பிரதமருக்கு இதுவரை விட்டுக் கொடுத்த ஆட்சி அதிகாரங்களை மீளப்பெறப்போவதாக மிரட்டுமளவுக்கு அவர் செல்லத் தொடங்கினார்.

சாசனத்தின் சரத்து 30 பிரிவு (1) ஜனாதிபதியின்

வட-கிழக்கு விவகாரத்தை தீர்த்து வைப்பதற்கு ஒரு புத்தம்புதிய அணுகுமுறையை முன்னெடுப்பதாக ரணில் விக்கிரமசிங்க அரசு பிரகடனம் செய்துள்ளது. ஒரே சமயத்தில் பல பாதைகள் ஊடாக நகரும் - MULTI TRACK - இராசதந்திரம் என்று இப்புதிய நடைமுறை விபரிக்கப்படுகின்றது. நிவாரணம், மீளக்கட்டியெழுப்பும் உதவிகள், வர்த்தகம், மக்கள் நன்மதிப்பைப்பெறும் நடவடிக்கைகள் என்பன ஒரு பாதை ஊடாக முன்னெடுக்கப்படும்.

பேச்சுவார்த்தைகள் இன்னுமொரு பாதையால் செல்லும் அதேவேளையில் அமெரிக்கா, இந்தியா, இங்கிலாந்து, சீனா போன்ற சக்தி வாய்ந்த நாடுகளுடன்

தமிழ்மக்களின் பாதுகாவலனாக தனது படைக்கலம், ஆளணி, தயார்நிலை என்பனவோடு தமிழீழ விடுதலைப்புலிகள் என்றும் நிலைத்து நிற்பர். போராட்ட வடிவம் மாறினாலும் குறிக்கோள் மாறமாட்டாது. பேச்சுக்களின் இறுதிக்கட்டமாக புதிய அரசியல் சாசனம் உருவாக்கப்படும்போது சட்டரீதியாக இவை அங்கீகரிக்கப் படவேண்டும். இருபக்க உறவுகள் சீராக அமையவேண்டுமாயின் இவ் அடிப்படை விடயத்தில் கவனம் எடுத்தாகவேண்டும். ●

# இதயச் சுமைகள் இறங்கிய பொழுதில்...

அவர்கள் காத்திருந்த நேரம் நெருங்குகின்றது. பகல் பொழுதின் இயல்புக்கோலம் இருளுக்குள் கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்துகொண்டிருந்தது. இருள் அந்த கெரில்லா வீரர்களின் தோழனாகின்றது. அவர்கள் தங்கள் ஆயுதத்தை தோளில் போட்டுக் கொண்டு கைகளில் தேசத் தலைவனின் மாவீரர் தினச் செய்தியையும் தாங்கியபடி மெல்ல நகரத் தொடங்கினார்கள். முதலில் தங்கள் தோழமையின் சிரிப்பு. கொஞ்சநேரத்தில் அது மறைந்து தங்கள் நகர்வைப்பற்றி தங்களுக்குள் இரகசியமான உரையாடல். ஏனென்றால் இன்று அவர்கள் புறப்படும் காரியத்தை எப்படியும் நிறைவேற்றியே ஆகவேண்டும்.

1997ஆம் ஆண்டின் மாவீரர் நாள். தாயகத்தின் பிரதேசமெங்கும் எழுச்சியாய் எல்லோரும் மாவீரர்களின் நினைவுகளை மீட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் அந்த வீரர்கள் நகர்ந்து கொண்டிருப்பது ஒரு வித்தியாசமான சூழல். இராணுவத்தின் ஆக்கிரமிப்புக் கரங்களுக்குள் சிறைப்பட்டுக் கிடக்கும் யாழ் தீபகற்பம். அதற்குள் மாண்டுபோன எங்கள் வீரர்களைச் சுமந்து நிற்கும் துயிலுமில்லம் நோக்கி அவர்கள் நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களை வழிநடத்திச் செல்பவன் சற்று வித்தியாசமானவன். அமைதியான பூமிக்குள் இருந்து எரிமலைகள் குமுறுவது போல் அமைதியான அவன் தோற்றத்திற்குள் இந்தத் தேசத்திற்காய் ஒரு இதயம் எப்போதுமே குமுறிக் கொண்டிருந்தது. ரஜீவன் என்ற பெயரை நீங்கள் அறிந்திருக்கச் சந்தர்ப்பமில்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் இப்போது இந்தப் பயணத்தின் கதை மூலமாவது அவனை உங்களுக்குப் புரியவைக்க முனைகிறேன்.

தமிழ்த் தேசத்தின் முக்கியமாக நினைவு கூரப்படும் நாட்களெல்லாம் சிங்கள இராணுவத்திற்கு பயப்பீதியுடன் கழியும் நாட்கள். அதிலும் மாவீரர் நாளெனில் சிங்களப் படைகள் உச்சக்கட்ட விழிப்புடனும் உச்சக்கட்ட பயப்பீதியுடனுமேயிருக்கும். அந்த நாளில்தான் ரஜீவன் தன் தோழர்களோடு கோப்பாய் துயிலுமில்லம் நோக்கி நகர்ந்து கொண்டிருந்தான்.

இன்று இராணுவம் விழிப்பாயிருக்கும். அதுவும் துயிலுமில்லத்தை அவன் கண்கள் நோட்டமிட்டபடியிருக்கும். எனவே அங்கு போவது நல்லதல்ல. என்று அவனிற்குச் சொல்லியபோதும் அவனின் இதயக் குமுறலுக்கு இதுவெல்லாம் பெரிதாகப் படவில்லை.

அவனது இதயக் குமுறலை நான் எப்படிச் சொல்வது? யாழ்ப்பாணம் இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் போனபோது நாங்கள் வன்னியைத் தளமாக்கினோம். அந்தத் தளத்தில் தான் ரஜீவன் உலாவிக் கொண்டிருந்தான். வன்னிக்குள் தான் அவனுக்குக் கடமை வழங்கப்பட்டிருந்தது. ஆனால் யாழ்ப்பாணத்தில் அவனுடன் நின்ற தோழர்கள் ஒவ்வொருவராய்ச் சென்று மடிந்தபோது அவனால் தன் உணர்வுகளை அடக்க முடியவில்லை. ஆனாலும் அவனின் இயக்க விசுவாசமும் கட்டளைக்குக் கீழ்ப்படியும் தன்மையும் மௌனமாகவே அவனை வன்னியிலேயே பணிபுரிய வைத்தது.

இருள் பகல்பொழுதை முழுமையாக அகற்றிவிட்டது. அந்த வீரர்கள் இருளுக்குள் மக்களின் வாசல்களைத் தட்டுகின்றனர். நீண்ட பயணத்தால் உடல் சோர்ந்து போயிருந்தது. கைகளில் இருந்த தலைவனின் மாவீரர் தினச் செய்தியை மக்களுக்குக் கொடுத்துவிட்டுத் தாகம் தீர்க்கத் தண்ணீர் வாங்கிப் பருகினர். நீண்ட நாளின்பின் தான் உலவிய ஊர்களில் நிற்பதாலும் அந்த மக்களைச் சந்தித்ததாலும் ரஜீவன் மனம் சற்று நிம்மதிப் பெருமூச்சு விட்டது. ஆனாலும் அவனது இதயச்சுமை இன்னமும் இறங்கவில்லை. அந்த இலக்குநோக்கி அவர்கள் பாதங்கள் நகருகின்றன.

இனி இராணுவத்தின் முற்றுகையை எப்போதும் சந்திக்கலாம். எப்போதும் சாவு நிகழலாம். ஆனாலும் அதைக் கடந்தவன் ரஜீவன் என்பதை அவன் நாட்குறிப்பில் இருந்த வரிகள் உணர்த்தி நிற்கின்றன. "கரும்புலி என்ற பெயர் என் போராட்ட வாழ்வில் என்னுள் ஒன்றாகக் கலந்துவிட்ட ஒரு சொல். எனது உயர்தரப் படிப்பா, போராட்ட வாழ்வா என எண்ணிக் கொண்டிருந்த என் சிந்தனையை போராட்ட வாழ்வில் இறங்க வைத்தது, காந்தரூபன், கொலின்ஸ், வினோத் ஆகியோரின் தாக்குதல். அடுத்த நாளே (10.7.1990) பயிற்சி முகாமை அடைந்தேன். குணா அண்ணையிடம் கரும்புலிக்குப் பெயர் கொடுத்ததும், கடுமையான பயிற்சியும், இரவில் சக்கை லொறிக்கு மண்மூடை அடுக்கியதும் சிலாவத்துறைச் சண்டைக்கு கரும்புலியாக செல்லக் கேட்டு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கையுயர்த்தி கை உளைந்ததும், இறுதியில் போராட்ட வாழ்வில் என்னை எப்பொழுதுமே ஒரு கரும்புலியென மனதில் எண்ணிக் கொண்டு செயற்படும்படி ஒரு

**: ச. புரட்சிமாறன் :**

தூண்டுதலை உருவாக்கியிருந்தது. 'ஒரு போராளி எப்பொழுதுமே தன்னை ஒரு கரும்புலியாக எண்ணுதல் வேண்டும்' என்ற என் எண்ணம் மறக்கக் கூடியதல்ல".

இந்தச் சிந்தனையை ரஜீவன் எப்போதும் நெஞ்சில் சுமந்தான். அதனால் சாவு அவன் பாதங்களில் சரணடைந்திருந்தது. இதுவரை மடிந்த தோழர்கள் எல்லாம் தங்கள் சாவுக்குப் பின்னர்தான் இந்தத் துயிலுமில்லம் வந்தனர். ஆனால் மடிந்துவிட்ட தன் தோழர்கள் துயிலுகின்ற இல்லத்தில் அவர்கள் உணர்வுகளைச் சுவாசிப்பதற்காகத் தன் சாவையே பொருட்படுத்தாது துயிலுமில்லம் நோக்கி நகருகின்றது அவனது பாதங்கள் - கூடவே அவன் தோழர்களும்.

எப்போதும் மற்றவர்களுக்காக தான் வேதனைப்படுவதைக்கூட அவன் பொருட்படுத்துவதில்லை. பயிற்சிமுகாமில் அவன் பொறுப்பாயிருந்த காலங்களில் பயிற்சி நடக்கும்போது தானும் முன்னணியில் நிற்பான். பொறுப்பாளர்கள் முன்னின்று செய்யும் போது போராளிகள் உற்சாகமாய்ச் செய்வார்கள் என்பதில் அவனுக்கு நம்பிக்கையிருந்தது. ஆனாலும் அவனது உடல் அந்தப் பயிற்சிகளைத் தாங்கக்கூடியதாக இருக்கவில்லை. ஏற்கனவே பல சண்டைக்களங்களில் விழுப்புண்பட்டு அவன் உடல் பல விழுப்புண் தடங்களைச் சுமந்திருந்தது. ஆனாலும் அதிகாலையிலேயே எழுந்து போராளிகளுடன் முன்னின்று பயிற்சி செய்வான். வேதனை அவன் உடலை சோதித்தபடி இருக்கும். ஆனாலும் தான் வளர்க்கும் போராளிகளுக்காக அவற்றைத் தாங்கிக்கொண்டு பின்னர் உடல் நோவினால் தனியே இருந்து அவஸ்தைப்படுவதைப் பார்க்க பொறுத்துக்கொள்ள முடியாமல் இருக்கும். ரஜீவனின் இந்த உணர்வே அவனுடன் நிற்கும் போராளிகள் இயல்பாகவே பயிற்சிகளைச் செய்ய தூண்டுதலாக அமைந்திருந்தது.

இன்றும் அவனது உடல் வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருந்தது. அவன் ஏற்கனவே வயிற்றில் காயமடைந்திருந்ததால் உடல் களைத்துவிட்டது. ஆனாலும் எப்போதும் போலவே இன்றும் அதைப் பொருட்படுத்தாமல் தன் தோழர்களுடன் ஒவ்வொரு வாசல்களுக்கும் தலைவனின் மாவீரர் தினச் செய்தியைக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

இப்போது துயிலுமில்லம் நெருங்குகின்றது. மிகுந்த விழிப்புடனும் தன் தோழர்களுடனும் ரஜீவன் துயிலுமில்லத்துள் நுழைகிறான். அங்கே இருளுக்குள் எஞ்சியிருந்த வெளிச்சத்தில் மடிந்த தோழர்களின் முகங்களைத் தேடுகிறான். துயிலுமில்லம் எதிரியால் சிதைக்கப்பட்டுக் கிடந்தது. கல்லறைகளாய் நாங்கள் தொழுதவையெல்லாம் இங்கு கற்தரையாய் மாறிக்கிடந்தது. ஆக்கிரமிப்பாளர்கள் இரக்க மற்றவர்கள் என்பது ஒன்றும் புதிதல்ல. ஏனெனில் களங்களில் உயிரற்ற எங்கள் வீரர்களின் உடல்களை நோக்கிச் சுட்டும், வெட்டியும் இனவெறி தீர்த்தவர்கள். ஆனால் ஆக்கிரமிப்பாளர் தங்கள் வெறித்தனத்தின் உச்சமாய் எங்கள் வீரர்களின் கல்லறைகளைச் சிதைத்தும் இனவெறியைக் காட்டி நின்றனர்.

ரஜீவனின் இதயம் வேகமாய் துடித்தது. கோபத்தின் உச்சியில் அவன் உடலின் உரோமங்கள் அப்போது சிலிர்த்திருக்கும். வார்த்தைகள் வெளிவர மறுக்கின்றன. ஆனாலும் அவன் மாவீரர்தினச் செய்தியைக் கையில் எடுக்கிறான். நீண்ட நாட்களின் பின் அங்கு வாழும் தோழர்களுக்கு தலைவன் தந்துவிட்ட மாவீரர் தினச் செய்தியை உரத்து வாசிக்கின்றான். அதன் மூலமாய் நீண்டநாள் பிரிவுச் சுமையை தன் தோழர்களுடன் பகிர்ந்திருக்க வேண்டும்.

27ம் திகதியின் நள்ளிரவுப் பொழுது, எதிரியால் சிதைக்கப்பட்ட கோப்பாய் மாவீரர்களின் கல்லறைகள் மேல் ரஜீவனும் அவன் தோழர்களும் ஏற்றிய சுடர் ஒளிர்கிறது. அந்த ஒளியில் அவனது இதயக் குமுறலுக்கு ஆறுதல் கிடைத்தது.

இனி அவர்களை விட்டுப் பிரியும் நேரம். துயிலுமில்லத்திலிருந்து அவன் செல்லவேண்டும். ஏனெனில் அது இராணுவக் கண்களின் கண்காணிப்பில் இருக்கும் பகுதி. அவன் தோழர்கள் அங்கிருந்து செல்ல ரஜீவனை அழைக்கின்றனர். அவன் அதற்குச் சம்மதிக்க மறுக்கிறான். எப்படிப் பிரிய மனம் வரும்?. ஒன்றாய் கண்ணெதிரில் வாழ்ந்துவிட்டு கல்லறைக்குள் இருப்பவர்களை விட்டுப்பிரிய எப்படி மனம்வரும்?.

ஆனாலும் தோழர்களின் வேண்டுதலை ஏற்றுக்கொண்டு அவன் துயிலுமில்லத்திலிருந்து பிரிய மனமில்லாமல் பிரிந்து செல்கிறான். அவர்கள் துயிலுமில்லத்தைக் கடந்து வயல்களினூடும், மரங்களினூடும் நகர்ந்து கொண்டிருந்தனர். இப்போது 27ஆம் திகதி முடிந்து 28ஆம் திகதி ஆரம்பித்திருந்தது. அந்த நள்ளிரவுப் பொழுதில் கோப்பாய் மாவீரர் துயிலுமில்ல வீதியைக்கடந்து வாழைத் தோட்டங்களுக்குள்ளால் புகுந்து மாதாகோவிலை அண்மிக்கின்றனர். நள்ளிரவின் அமைதியைக் குலைத்தபடி சடசடக்கின்றன ஆக்கிரமிப்பாளர்களின் துப்பாக்கிகள். எங்கள் வீரர்களின்



மேஜர். ரஜீவன்

துப்பாக்கிகளில் இருந்து சன்னங்கள் புறப்படுகின்றன. மக்கள் தங்கள் வீட்டு வாசல்களை இறுக மூடிக்கொண்டனர். ஆனால் அங்கே ஒரு மரத்தடியில் ரஜீவன் அந்த மக்களுக்காக இரத்தம் சிந்திக் கொண்டிருந்தான்.

அவனது தோள்ப்பட்டையில் பாய்ந்த சன்னம் அவனின் ஒரு கையை செயலிழக்க வைத்தது. அப்போதும் தன்னைக் காப்பாற்றும்படி உரத்துக் கதறவில்லை. எப்போதும் தாயன்போடு தன் தோழர்களை வளர்த்தானே அதுபோல் இப்போதும் அந்தத் தாயன்போடு உரத்துக் கத்துகிறான். 'எனக்கு வெடிபட்டிட்டுது, என்னைப் பாக்காம எப்படியெண்டாலும் முற்றுகையை உடையுங்கோ'. அந்த வார்த்தைகளையே அவன் திரும்பத்திரும்ப உரத்துச் சொல்லிக் கொண்டிருந்தான். ரஜீவனின் இதயத் துடிப்பின் வேகம் கொஞ்சம் கொஞ்சமாய் குறைந்து கொண்டிருந்தது. ஆனால் அன்றைய பொழுதில் தான் நினைத்ததைச் சாதித்த திருப்தி அவனுக்கிருந்திருக்கும். அதனால் அவனது இதயக் குமுறல் தணிந்து அமைதியாய் கோப்பாய் மண்ணிலே அவன் உயிர் பிரிந்தது. கூடவே அவனுடன் வந்த உயிரவன் என்ற தோழனும் அமைதியாய் மடிந்துபோனான்.



இன்று துயிலுமில்லம் மீண்டும் உயிர்க்கிறது. எங்கள் வீரர்களின் நினைவுகள் நிழற்படமாய் கண்முன் தெரிகிறது. எங்கள் தாயகத்தின் விடிவிற்காய் இப்படித்தான் எங்கள் தோழர்களை விலை கொடுத்தோம். இந்த மாவீரர்நாள் நினைவில் இறுதியாய் உங்கள் இதயத்தில் இந்த வரிகளைப் பதித்துக் கொள்ளுங்கள். 'எங்கள் வீரர்கள் உறங்கிய துயிலுமில்லங்களைக் கூட சிதைத்தவர்களுடனேயே நாங்கள் சமாதானம் பேசுகின்றோம்'.

# மாவீரர் நாள் உரை - 2002

(1ம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று உலகம் மாறி வருகிறது. உலக ஒழுங்கும் மாறி வருகிறது. உலக நாடுகளின் உறவுகளும் மாறி வருகின்றன. மனித சமுதாயம் முன்னென்றும் காணாத புதிய சவால்களுக்கு முகம் கொடுத்து நிற்கிறது.

இன்றைய உலக நிதர்சனத்தை, அதன் யதார்த்தப் புறநிலைகளை நாம் உதாசீனம் செய்ய முடியாது. இன்றைய காலத்தையும், இக்காலத்தில் கட்டவிழும் சூழலையும் நாம் ஆழமாகப் புரிந்து, கால நிலை மாற்றங்களுக்கு ஏற்ப, எமது விடுதலைப் பாதையை செப்பனிடுவது அவசியம். இன்றைய காலத்தின் தேவை அது. உலகப் போக்குடன் முரண்படாது, உலக வரலாற்றின் ஓட்டத்திற்கு இசைவாக, நாமும் எமது போராட்ட வரலாற்றை முன்நகர்த்திச் செல்வதே விவேகமானது. இன்றைய வரலாற்றின் கட்டாயமும் அதுவே.

எமது விடுதலைப் போராட்டம் கால்நூற்றாண்டுகால வரலாறாக நீட்சி பெற்றுச் செல்கிறது. இருபது ஆண்டுகளுக்கு முன் இன்றைய நாளில், எமது முதலாவது மாவீரன் களப்பலி ஆகியதைத் தொடர்ந்து இன்று வரை பல்லாயிரக் கணக்கில் எமது போராளிகள் விடுதலைப் போரில் களமாடி வீழ்ந்திருக்கிறார்கள். எமது இனத்தைப் பேரழிவிலிருந்து பாதுகாத்து, எமது தாயக நிலத்தை அந்நியனிடமிருந்து மீட்டெடுக்க எமது விடுதலை இயக்கம் அளப்பரிய அர்ப்பணிப்புகளைச் செய்துள்ளது. எமது மாவீரர்களின் இம்மகத்தான தியாகங்களால், எத்தனையோ தடவைகள் நாம் பேரழிவுகளின் விளிம்பிலிருந்து மீண்டிருக்கின்றோம். மரணத்தின் வாயிலுக்குச் சென்று மறுபிறவி எடுத்திருக்கின்றோம். வல்லாதிக்க சக்திகளின் தலையீடுகளைத் தனித்து நின்று தகர்த்திருக்கின்றோம். எமது விடுதலை இயக்கம் இன்று வானளாவ வளர்ந்து நிற்கிறது. நிமிர்ந்து நிற்கிறது. எமது இயக்க விருட்சத்தின் வேர்களும் விழுதுகளுமாக நிற்பவர்கள் எமது மாவீரர்களே.

எனது அன்பார்ந்த மக்களே,

இன்று எமது விடுதலைப் போராட்டம் ஒரு புதிய வளர்ச்சிப் பாதையில், ஒரு புதிய வரலாற்றுத் திருப்பத்தில் காலடி வைத்திருக்கிறது. என்றுமில்லாதவாறு இன்று ஒரு புதிய சவாலை நாம் சந்தித்து நிற்கின்றோம். போருக்கு ஓய்வு கொடுத்து, சமா தான வழியில், சமரசப் பேச்சுக்கள் வாயிலாக எமது மக்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். நாம் வன்முறையில் பற்றுக் கொண்ட போர் வெறியர் என்றும் சமாதானத்தின் விரோதிகள் என்றும், காலம் காலமாக சிங்களப் பேரினவாதிகள் மேற்கொண்டு வந்த பரப்புரையைப் பொய்யாக்கும் வகையில் நாம் நேர்மையுடனும் உறுதியுடனும் சமாதான வழி முறையைத் தழுவி நிற்கின்றோம்.

ஆயுத வன்முறையில் ஆசை கொண்டு நாம் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. இன அழிவை இலக்காகக் கொண்ட இனவாத ஒடுக்குமுறையின் உச்சத்தில், அந்நிய இராணுவ அடக்குமுறை சகிக்க முடியாத அளவிற்குத் தீவிரமடைந்த கட்டத்திலேயே நாம் ஆயுதம் ஏந்தினோம். எமது மக்களின் உயிரைக் காக்கவும், எமது மக்களின் உரிமையை நிலை நாட்டவும், எமது இயக்கம் மேற்கொண்ட ஆயுதம் தரித்த விடுதலைப் போரை பயங்கரவாதமாகச் சிங்கள அரசுகள் சித்தரித்தன. தமிழரின் உரிமைப் போரைத் திரிபுபடுத்தி, இழிவுபடுத்தி உலகடங்கிலும் விசமப் பிரச்சாரங்கள் முடுக்கிவிடப்பட்டன. இப்பொய்யான பரப்புரையை நம்பி, பல உலக நாடுகள் எமது அமைப்பிற்குத் தடை விதித்தன. பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டு உலக அரங்கிலிருந்து நாம் ஓரம் கட்டப்பட்டோம். உலக நாடுகள் ஒன்று திரண்டு எதிரியின் போர்த் திட்டத்திற்கு முண்டு கொடுத்தன. அனைத்து உலகத்தினதும் ஆதரவும், ஆயுத உதவியும் கிட்டியதால் மூர்க்கம் கொண்ட எதிரி போரைத் தீவிரப் படுத்தினான். நாம் தனித்து நின்று போருக்கு முகம் கொடுத்தோம். மக்களின் ஆதரவு மட்டும் எமக்கு மலையாக நின்றது. நாம் அலை யலையாகத் திரண்டெழுந்து ஆக்கிரமிப்புப் படைகளுடன் மோதினோம். போர்க் கலையில் எமது வீரர்கள் படைத்த அபாரமான சாதனைகள் உலக இராணுவ நிபுணர்களையே திகைப்பில் ஆழ்த்தின. போரிற்புலிகளை வெற்றி கொள்ள முடியாது என்பதனைச் சிங்களத் தேசமும் உலகமும் உணர்ந்து கொண்டன. இந்தச் சூழ்நிலையில்தான், அதாவது எமது போராட்ட வல்லமையை நிரூபித்துக் காட்டி, எமக்குச் சாதகமான இராணுவ சமநிலையில் நின்றபடியே நாம் சமாதானத்தின் கதவுகளைத் திறந்தோம். சமாதானத்தில் எமக்கு உண்மையான பற்றுண்டு என்பதை உலகத்திற்கு உணர்த்திக் காட்டவே நாம் இராணுவ மேலாதிக்க நிலையில் நின்றுகொண்டு அமைதி வழியைத் தழுவினோம்.

போருக்கு ஓய்வு கொடுக்கும் விடயத்திலும் நாமே முன் முயற்சிகளை எடுத்தோம். ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தப் பிரகடனம் செய்து, அரசாங்கத்தை அமைதி வழிக்கு அழைத்தோம். சமாதானத்திற்கான மனுவைப் பெற்று ஆட்சி பீடம் ஏறிய புதிய அரசு, எமது போர்நிறுத்த அறிவிப்பை ஏற்றுக் கொண்டது. இவ்வாண்டு பெப்ரவரி 23ம் திகதியிலிருந்து இரு தரப்பும் இணங்கிய போர் நிறுத்தம் சர்வதேச நாடுகளின் கண்காணிப்புடன் செயலுக்கு வந்தது. இப்போர் நிறுத்தம் கடந்த ஒன்பது மாதங்களாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. சிங்கள ஆயுதப் படையினரிற் சில பிரிவினரும், இனவாத சக்திகளும், சமாதான விரோதிகளும் போர் நிறுத்தத்தைக் குழப்பி, மோதலை ஏற்படுத்த பல தடவைகள் முயன்றனர். எத்தனையோ ஆத்திரமூட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எமது மக்கள் பலர் அநியாயமாகக் கொல்லப்பட்டனர். ஆயினும், எமது இயக்கம், ஒழுக்கம் கட்டுப்பாட்டை இறுக்கமாகக் கடைப் பிடித்து, அமைதியை குலையவிடாது சமாதானத்தைப் பேணி வருகிறது. சமாதானப் பாதையில் எமக்குள்ள உண்மையான உறுதிப்பாட்டிற்கு இதுவொரு நல்ல எடுத்துக்காட்டு.

எமது மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காண்பது சாத்தியமாயின் அதனை முயன்று பார்ப்பதில் முழுமனதுடனும், நேர்மையுடனும் செயற்பட நாம் தயாராக இருக்கின்றோம். எமது மக்கள், தமது தாயக மண்ணில், தம்மைத் தாமே ஆட்சி புரியும் உரிமை உடையவர்களாக, சுதந்திரத்துடன் கௌரவமாக வாழவேண்டும் என்பதே எமது போராட்ட இலட்சியம். இந்த இலட்சியம் சமாதான வழியிற் கைகூடுமானால் அந்த வழியைத் தழுவ நாம் என்றுமே தயாராக இருக்கின்றோம்.

சமாதான வழிமுறை தழுவி, எமது மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க நாம் என்றுமே தயங்கியதில்லை. திம்புவில், டில்லியில், கொழும்பில், யாழ்ப்பாணத்தில், இப்பொழுது தாய்லாந்திலாக நாம் பல தடவைகள், பல்வேறு வரலாற்றுச்

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

# விடுதலைக்கு விதைத்த வயல்கள்

-மிகுதன்-

தீபங்கள் சுடர்விடும் முன்னிரவில், வித்தாகிப்போன உறவுகளை நினைந்துருகிச் சின்னஞ்சிறுசுகள் தொடக்கம் ஈன்றெடுத்த பெற்றோர்பேரன் வரை மலர் கையிலேந்தி வணங்கிடும் நேரம். ஒவ்வொரு தீச்சுடர்களும் அவர்கள் கண்களில் சங்கமமாகி அவர்களின் செல்வங்களுடன் உறவாட அழைத்துச் செல்லும் அற்புதப்பயணம் ஆரம்பித்துவிடும். தங்கள் கண்ணெதிரினிலேயே மண்ணில் உறங்கிடும் இந்த அற்புதக் குழந்தைகள் நினைவு உயிர் பெற்றுலவும் பொழுதின் பெற்றவர்களின் ஆன்ம தவிப்பை அடக்கிடும். உறவுகளின் பிரிவுத் துயரைத் துடைத்துவிடும். ஒவ்வொரு கார்த்திகை இருபத்தியேழும் இப்படித்தான் கழிகின்றது.

துயிலுமில்லங்கள் தமிழீழ வரலாற்றின் ஒரு முக்கியமான சான்றாகவுள்ளன. தேச விடியலை தினம் மூச்சாகக் கொண்டு களமாடி காவியம் படைத்தவர்கள் எல்லோரையும் நினைவில் நிறுத்தும். ஆனால் அந்த சக்தி அவர்கள் எந்த மண்ணிற்காகமடிந்தார்களோ அந்த மண்ணுக்கு இருக்கும் என்பதை இங்கு துயிலுமில்லங்கள் காட்டி நிற்கின்றன. வரலாற்றின் கடத்திலே பெரும் திருப்பங்களை ஏற்படுத்துவதில் துயிலுமில்லங்களின் பங்கு அளப்பெரியது. காலத்தின் ஒவ்வொரு கணமும் அங்கே கல்லறைகளாகின்றன. எமது விடுதலை வீச்சின் வலிமையை கல்லறைகள் காவிநிற்கின்றன. ஒவ்வொரு வீரனின் கல்லறை என்பது அவ்வீரனின் வீரவரலாறு சொல்லும் ஒரு கலைப் பொக்கிசமாகின்றது. இதற்காகவே எங்கள் வீரர்கள் அன்று தொட்டு விதைக்கப்பட்டு வருகின்றனர்.

போராட்ட ஆரம்ப காலத்தில் சடங்கிற்கேற்ப தகனம் செய்யப்பட்டுவந்த வித்துடல்கள் தொண்ணூறுகளின் பின்னர் விதைப்பது என்னும் முடிவு எடுக்கப்பட்டது. அதுவரை தகனமாக்கப்பட்டவர்களுக்கு நினைவுக் கற்கள் நிறுவப்பட்டன. அன்று தொடக்கம் தமிழரின் தேசிய விடுதலை என்னும் கொதிப்பை தணியவிடாது காத்த உலை முகங்கள் இத்துயிலுமில்லங்களே.

2002 கார்த்திகை 27 மாவீரர் நாள் பல வருடங்களின் பின்பு முழுத் தமிழீழத்திலுமே அனுஸ்டிக்கப்பட்ட ஒரு நிகழ்வாக அமைந்தது. இதுவரையும் ஆக்கிரமிப்புக்குட்பட்ட துயிலுமில்லங்களில் பல விலை கொடுப்புக்களுடனேயே தீபம் ஏற்றப்பட்டுவந்தது. ஒவ்வொரு வருடமும் எதிரிகளுக்கு எச்சரிக்கை தினமாகும் இந்நாள். இம்முறை அவர்களுக்கு பெரும் அடி கொடுப்பதாகவே அமைந்தது.

எந்த மக்களின் மனங்களை வெல்வதற்காக அந்த இழிவு வேலையை எதிரிகள் செய்தார்களோ அந்த மக்களாலேயே அது நிர்மாணிக்கப்பட்ட வரலாறு எதிரிகள் முகத்தில் கரி பூசிவிட்டது. 1995 களின் பின் எதிரி ஆக்கிரமித்த பிரதேசங்களில் எமது வீரக்குழந்தைகளின் துயிலுமில்லங்கள் அழிக்கப்பட்டன. நினைவுக் கற்கள் நொருக்கப்பட்டன. விதைகுழிகள் தோண்டப்பட்டன. பின்னர் அவற்றைச் சுற்றி கடுங்காவல்கள் போடப்பட்டன.

எந்த இராணுவமும் செய்ய நினைக்காத ஒரு அவமானம் தரும் இழிகாரியத்தை எங்கள் எதிரி செய்து முடித்திருந்தான். கல்லறைகளில் துயின்று கொண்டிருந்த எம் வீரர்களின் நிம்மதியான தூக்கம் கலைக்கப்பட்டது. மக்கள் மனங்களை வெல்வதாக நினைத்து மக்கள் மனங்களை கொன்று தொலைத்தான் எதிரி. எதிரிக்கு எம் கல்லறைகளெல்லாம் எமனாகத் தோன்றியிருக்கும். உலகின் முன் வெட்கித் தலைகுனியும் இச்செயலைப்புரிந்தது ஒரு பௌத்த இராணுவம் என்பது மேலும் வேதனைக்குரியது.

ஒரு பிணத்தைக் கண்டதாலேயே வாழ்வின் முடிவு பற்றி சிந்தித்து ஞான நிட்டையிருந்து புத்தர் பரிநிர்வாணம் அடைந்தார். கல்லறைக்குள் காக்கப்படும் உடலைக்கூட விட்டுவைக்க, மரியாதை செய்யத் திராணியற்ற சிங்கள இராணுவத்தால் பௌத்தம் காக்கப்படுமா? அதோடு இல்லாமல் தங்கள் குழந்தைகள் தோண்டப்பட்டு அகற்றப்பட்டதறிந்து துடிதுடித்த உறவுகளின் உள்ளக் குமுறல்களையும்கூட எதிரி விட்டுவைக்கவில்லை. அவைகளுக்கும் கூடவே பூட்டுப்போட்டிருந்தான் இவ்வளவு காலமும்.

உறவுகளின் உள்ளக் குமுறல்கள், ஆன்மத் தவிப்புகள், தூக்கம் கலைந்த கல்லறை வீரர்களின் ஆவேசமென எல்லாம் ஒருசுற்றெழுந்து ஓய்ந்தவேளையில் எதிரி வாயடைத்துப் போனான். இம்முறை துயிலுமில்லங்கள் மீண்டும் சுவரெழுப்பிக்கொண்டன. கலைந்துபோன தூக்கங்கள் தொடர 'படுக்கை'களிடப்பட்டன. நினைவுக் கற்கள் நிமிர்ந்து கொண்டன. இல்லங்கள் புதுப் பொலிவுற்றன. தங்களால் வெல்லப்பட்டதாக நினைத்த மனங்களே இவற்றை செய்துமுடித்தமை எதிரிக்கு ஒரு பெரிய அடி. துயிலுமில்லங்கள் தேசியஆன்மா எனும் உயிர்க் கொதிப்பை தணியவிடாத உலை முகங்களே என்பது மீண்டும் உண்மையானது. அழித்தவர்கள் கண்ணெதிரிலேயே அவை அழகொளிர்கின்றன. கையில் பூக்களுடன், மீண்டும் அதே மணியோசை, அதே தீப ஒளி, அதே பாடல். துயிலுமில்லங்களெல்லாம் எதிரிக்கு ஒரு சேதி சொல்லுகின்றன. மீளாத்துயில் கலைக்காதீர்! இன்னொரு சுற்றெழுந்து ஓயவைக்காதீர்! துயிலவிடுங்கள் இல்லாவிடில் உயிர் மரிப்பீர்கள் என்பதாக.

உலக வரலாற்றில் இடம்பிடித்த இராணுவ வீரர்களின் கல்லறைகள் நினைவுச் சின்னங்கள் பாதுகாக்கப்பட்டு போற்றப்பட்டு வருவதுபோல எமது துயிலும் இல்லங்கள் பாதுகாக்கப்படவேண்டும் அவை எமது சொத்து. போற்றப்படவேண்டும் அவை எமது வரலாறு. உறங்கும் வீரர்களின் நினைவு என்றும் விட்டகலாதபடி அங்கு பெற்றோர்கள் உலவ வேண்டும். விடியப்போகும் தமிழீழத்தில் அவர் பெயர்பாடும் சிறுவர்கள் அங்கு உறவாட வேண்டும். வீரவேங்கைகள் நினைவில் உறவுகள் அங்கு உரையாடவேண்டும். துயிலும் இல்லங்கள் முழு விழிப்புக்குரியவை. ஒவ்வொரு மணித்துளியும் அவை இயங்கிக்கொண்டிருக்க வேண்டும் அந்த வீரர்களின் துயில் கலையாதபடி.

'அவர்கள் வாழ்வனைத்தும்
துறந்தது எமக்காக
அவர் நினைவனைத்தும்
சுமப்போம் அதற்காக.'

"மாற்றார் சிதைத்தாலும் மாவீரர்
கல்லறை
மண்ணாய் நிலைக்குமையா
ஆற்றல் மிகுந்த மாவீரர் கல்லறை
மண்ணில்
அனலே முளைக்குமையா"

(காசி ஆனந்தன்)

**மாவீரர் நாள் உரை - 2002** (11ம் பக்கத் தொடர்ச்சி...)

சூழல்களிற் பேச்சுவார்த்தையிற் பங்குபற்றி வந்திருக்கின்றோம். முன்னைய பேச்சுக்கள் எல்லாமே தோல்வியிலேயே முடிந்தன. முன்னைய சிங்கள அரசுகளின் கடும் போக்கும் நேர்மையற்ற அரசியல் அணுகுமுறைகளுமே தோல்விக்கு காரணம். எனினும், திரு.ரணில் விக்கிரமசிங்காவின் இன்றைய அரசாங்கம் நேர்மையுடனும் துணிவுடனும் தமிழரின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முனைகிறது. உறுதியான அடித்தளத்திற் கட்டியெழுப்பப்பட்ட போர்நிறுத்தமும், அதனை மேலும் வலுப்படுத்தத் சர்வதேசக் கண்காணிப்புக் குழுவினரின் முயற்சிகளும் சமாதான அணுகுமுறைக்கு உரமேற்றி வருகின்றன. அத்தோடு, மிகவும் சாதுரியமாகவும், சாணக்கியமாகவும் நோர்வே அரசு கடைப்பிடிக்கும் அனுசரணை முறையானது இன்றைய பேச்சுக்கள் முன்னேறிச் செல்வதற்கு பேருதவியாக இருந்து வருகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக, என்றுமில்லாதவாறு சர்வதேச அரசுகள் இச் சமாதான முயற்சியில் காட்டிவரும் ஆர்வமும், அக்கறையும், ஊக்குவிப்பும் இரு தரப்பினருக்கும் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் கொடுத்து வருகின்றன. ஒரு வலுவான சமாதான அடித்தளத்தில் நிலையூன்றி நின்றவாறு, படிப்படியாக, கட்டம் கட்டமாக, பரஸ்பர நம்பிக்கையை வளர்த்தபடி பேச்சுக்களை முன்நகர்த்திச் செல்வதே சாலச் சிறந்தது.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக முடிவில்லாது தொடர்ந்த கொடிய போரின் விளைவாக எமது மக்கள் பாரிய வாழ்நிலைப் பிரச்சினைகளை எதிர்கொண்டு நிற்கின்றார்கள். தமிழர் தேசத்தின் சமூகப் பொருளாதாரக் கட்டமைப்புகள் சிதைந்து கிடக்கின்றன. தமிழரின் நகரங்களும், பட்டினங்களும், கிராமங்களும் தரைமட்டமாகக் கிடக்கின்றன. வீடுகள், கோவில்கள், பாடசாலைகள் அழிந்து கிடக்கின்றன. காலம் காலமாக இந்த மண்ணில் நிலைத்து நின்ற ஒரு பண்டைய நாகரீகம் வேரோடு சாய்க்கப்பட்டிருக்கிறது. இச்சிதைவுகள், அழிவுகள் மத்தியிலிருந்து எமது மக்கள் மீண்டும் தமது சமூகப் பொருளாதார வாழ்வை மீளக் கட்டி எழுப்புவது என்பது இலகுவான காரியமல்ல. இதுவொரு பிரமாண்டமான மனிதாபிமானப் பிரச்சினை. இப்பிரச்சினையைச் சர்வதேச சமூகம் அனுதாபத்துடன் அணுக வேண்டும். அழிந்து கிடக்கும் தமிழர் தேசத்தின் புனர்வாழ்வுக்கும் புனர்நிர்மாணத்திற்கும் உதவியளிக்க வெளிநாடுகள் பல முன்வந்துள்ளமை எமக்கு நிம்மதியைத் தருகிறது.

தமிழர் தாயகத்தில் அமைதி நிலை தோன்றியபோதும் இயல்பு நிலை தோன்றவில்லை. 'உயர் பாதுகாப்பு வலையங்கள்' என்ற போர்வையில் எமது மக்களின் வாழ்விடங்களை, சமூக, பொருளாதார, பண்பாட்டு மையங்களை சிங்கள ஆயுதப் படைகள் ஆக்கிரமித்து நிற்கின்றன. சிறிய அளவிலான புவியியற் பரப்பும், குடிசன நெரிசலும் கொண்ட யாழ்ப்பாணக் குடாநாட்டை நாற்பதினாயிரம் படையினர் ஆக்கிரமித்து நிற்கின்றனர். எமது மக்கள் தமது இயல்பு வாழ்வை நடத்த முடியாதவாறு மூச்சுத்திணறும் ஆக்கிரமிப்பு. என்றுமே ஒரு பதட்ட நிலை. தமிழர் பண்பாட்டின் இதய பூமியான யாழ்ப்பாணம் ஒரு திறந்த வெளிச் சிறையாக மாற்றப் பட்டிருக்கின்றது. இங்கு எமது மக்களைச் சிங்கள இராணுவம் தனது பாதுகாப்புக் கேடயங்களாகவே பாவித்து வருகிறது. வீடுகளும், வீதிகளும், கிராமங்களும் இராணுவ ஆக்கிரமிப்பில் விழுங்கப்பட்டிருப்பதால் இடம் பெயர்ந்த பல்லாயிரம் மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்ப முடியாது அவதிப்படுகிறார்கள். இப் பிரச்சினைக்குத் தீர்வு காணாத வரை யாழ்ப்பாணத்தில் சமூக அமைதியும் இயல்பு நிலையும் தோன்றுவது சாத்தியமில்லை.

போரை முடிவுக்கு கொண்டு வந்து, போரினாற் பாதிக்கப்பட்ட எமது மக்களின் அவசர, அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளை பேச்சுக்களின் ஆரம்ப கட்டத்தில் தீர்த்து வைக்க வேண்டும் என்பதே அன்றும் சரி இன்றும் சரி எமது நிலைப்பாடாக இருந்து வருகின்றது. எமது நிலைப்பாட்டை முன்னைய அரசு நிராகரித்ததன் காரணமாகவே அன்றைய சமாதான முயற்சி தோல்வி கண்டது. ஏதோ நாம் தமிழரின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தொடுவதற்குப் பயந்து, அன்றாடப் பிரச்சினைகளை வலியுறுத்துவதாக முன்னாள் அரசு தவறாகக் கருதியது. ஆயினும் இன்றைய அரசாங்கம், பேச்சுக்களின் ஆரம்பக் கட்டத்தில் எமது மக்களின் அவசரமான வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வந்து நடவடிக்கைகளை எடுத்து வருவது ஆக்கபூர்வமான அறிகுறியாகும்.

பேச்சுவார்த்தையின்போது, எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் வரை, சகல விடயங்களையும் பேசுவதற்கு நாம் தயார். ஆயினும் பேச்சுக்கள் எவ்வித நிபந்தனைகளும் நிர்ப்பந்தங்களும் இன்றி, வரம்புகள் வரையறைகள் இன்றி, காலக் கட்டாயமின்றி, சுதந்திரமாக நடைபெறுவதையே நாம் விரும்புகின்றோம். ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டு எல்லைக்குள் பேச்சுக்கள் நிகழ்த்தப்பட வேண்டுமென வற்புறுத்துவதோ, அன்றி நிர்ப்பந்திப்பதோ எமது மக்களின் அடிப்படை அரசியற் சுதந்திரத்தையும், தேர்வையும் மீறுவதாக அமையும். தமது அரசியல் தகைமையையும், தமது சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்வையும் நிர்ணயிப்பது எமது மக்களின் அடிப்படையான அரசியல் உரிமையாகும். சுயநிர்ணய உரிமையின் சாராம்சமும் இதுதான்.

ஐ.நா. சாசனத்திலும், பிரகடனங்களிலும் குறிப்பிடப்படும் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை மையப் பொருளாகக் கொண்டே எமது போராட்ட இலட்சியம் நெறிப்படுத்தப்பட்டிருக்கிறது. அன்றும் சரி, இன்றும் சரி, சுயநிர்ணய உரிமைக்கான எமது போராட்ட இலட்சியத்தில் நாம் உறுதி பூண்டு நிற்கின்றோம். தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழரின் சுயநிர்ணய உரிமை ஆகியனவையே எமது அரசியல் இலட்சியத்தின் அடிப்படைகள். திம்புவிலிருந்து தாய்லாந்து வரை இந்த அடிப்படைகளையே நாம் வலியுறுத்தி வருகின்றோம். இம் மூலக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பது எமது நிலைப்பாடு.

தனித்துவமான ஒரு மொழி, பண்பாடு, வரலாறு, நன்கு வரையறுக்கப்பட்ட ஒரு தாயக நிலம், இன அடையாள உணர்வு போன்ற பண்புகளை உடையவர்கள் என்பதால், எமது மக்கள் ஒரு தேசிய இனமாக, ஒரு மக்கள் சமூகமாக அமைந்துள்ளனர். ஒரு தனித்துவமான மக்கள் சமூகம் என்ற ரீதியில் எமது மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்தானவர்கள். சுயநிர்ணய உரிமை என்பது உள்ளான, புறமான இரு அம்சங்களைக் கொண்டது. உள்ளான சுயநிர்ணயம் என்பது ஒரு மக்கள் சமூகத்தின் பிரதேச சுயாட்சி உரிமையை வலியுறுத்துகின்றது.

தமிழ் மக்கள், தமது சொந்த மண்ணில், வரலாற்று ரீதியாக வாழ்ந்து வந்த பாரம்பரிய மண்ணில், அந்நிய சக்திகளின் ஆதிக்கம், தலையீடு இன்றி, சுதந்திரமாக, கௌரவமாக வாழ விரும்புகின்றார்கள். தமது மொழியை வளர்த்து, தமது பண்பாட்டைப் பேணி, தமது பொருளாதாரத்தை மேம்படுத்தி, தமது இன அடையாளத்தைப் பாதுகாத்து வாழ விரும்புகின்றார்கள். தமது தாயக மண்ணில், தம்மைத் தாமே ஆளும் சுயாட்சி உரிமையோடு வாழ விரும்புகின்றார்கள். இதுவே எமது மக்களின் அரசியல் அபிலாசை. உள்ளான சுயநிர்ணயத்தின் அர்த்த பரிமாணம் இதில்தான் அடங்கியிருக்கிறது. உள்ளான சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில், எமது தாயக நிலத்தில், எமது மக்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய பூரண சுயாட்சி அதிகாரத்துடன் ஒரு தீர்வு முன்வைக்கப் பட்டால், நாம் அத்திட்டத்தை சாதகமாக



பரிசீலனை செய்வோம். ஆனால், அதேவேளை, எமது மக்களுக்கு உரித்தான உள்ளான சுயநிர்ணயம் மறுக்கப்பட்டு, பிரதேச சுயாட்சி உரிமை நிராகரிக்கப்பட்டால் நாம் பிரிந்து சென்று தனியரசு அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

இனவாதமும், இனவாத ஒடுக்குமுறையுமே பிரிவினைவாத அரசியலுக்கும் கிளர்ச்சிகளுக்கும் மூல காரணமாக அமைகின்றன. நிலையான சமாதானத்தையும், இன ஒருமைப்பாட்டையும், பொருளாதார மேம்பாட்டையும் சிங்கள மக்கள் விரும்புவார்களானால் இனவாத சக்திகளை இனம் கண்டு ஒதுக்க வேண்டும். தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண முழு மனதுடன் ஒத்துழைக்க வேண்டும். தமிழ் மக்கள் தமது தாயகத்தில் சுயாட்சி அதிகாரமுடைய ஆட்சியை நிறுவி, தம்மைத் தாமே ஆளுவதற்கு சிங்கள மக்கள் தடையாக இருக்கக் கூடாது. தமிழர்களுடன் சமாதான சகவாழ்வை நடத்துவதா அன்றி தமிழர்களை பிரிந்து செல்ல நிர்ப்பந்திப்பதா என்பது சிங்கள தேசத்தின் அரசியற் போக்கில்தான் தங்கியிருக்கிறது.

நம்பிக்கையூட்டும் நல்லெண்ண சூழ்நிலையில், அரசு-புலிகள் மத்தியிலான பேச்சுக்கள் முன்னேற்றமடைந்து செல்வது எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த சமரசப் பேச்சுக்களில் உலக நாடுகள் காட்டும் ஆர்வமும், யுத்தத்தால் சிதைந்து கிடக்கும் தமிழர் தேசத்தை மீளக் கட்டியெழுப்பி, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு புனர்வாழ்வளிக்க முன்வந்திருப்பதும் எமக்கு உற்சாகத்தைத் தருகிறது. நோர்வே அரசின் அனுசரணையுடன் நடைபெறும் சமாதான முயற்சி வெற்றி பெற வேண்டும் என்பதும், இத் தீவில் வதியும் சகல சமூகத்தினரும் ஒற்றுமையாக, ஒத்திசைவாக ஒன்று கூடி வாழ வேண்டும் என்பதுமே எமது ஆழமான அவா. பெரும் நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் உலகத்தின் நல்லாசியுடனும் நிகழ்ந்து வரும் சமாதானப் பேச்சுக்களை, தமது சுயநல அரசியல் நோக்கங்களுக்காகச் சிங்களப் பேரினவாத சக்திகள் குழப்பிவிட்டால், அது தமிழ் மக்களைத் தனியரசுப் பாதையில் இட்டுச் செல்லும் என்பது திண்ணம்.

அமைதி வழியில், மென்முறை தழுவி, நேர்மையுடனும் நெஞ்சுறுதியுடனும் நாம் எமது போராட்ட இலட்சியத்தை அடைய முயன்று வருகின்றோம். காலத்திற்கு ஏற்ப, வரலாற்றுக் கட்டாயத்திற்கு அமைய, எமது போராட்ட வழிமுறைகள் மாறலாம். ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப் போவதில்லை.

சத்தியத்தின் சாட்சியாக நின்று, எமது மாவீரர்களின் தியாக வரலாறு எமக்கு வழிகாட்டும். அந்த சத்தியத்தின் வழியில் சென்று, நாம் எமது இலட்சியத்தை அடைவோம் என்பது உறுதி.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'